



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ்

அறிவித்த அறிவிப்புகள்

(01.06.2018 முதல் 09.07.2018 வரை)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ்

அறிவித்த அறிவிப்புகள்

**(01.06.2018 முதல் 09.07.2018 வரை)**

சிறப்பு வெளியீடு எண் 22

# தமிழரசு

இலவச வெளியீடு

ஜூலை 2018

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

# பொருளடக்கம்


| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்–1 தேர்வில் பங்கேற்க வயது உச்சவரம்பு உயர்வு! | 1 |
| 2. | வேளச்சேரியில் ரூ.30 கோடி செலவில் வனத்துறை தலைமை அலுவலகக் கட்டடம்! | 2 |
| 3. | ரூ.42.92 கோடி செலவில் அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 2,283 திறன் வகுப்பறைகள் (Smart Classes)! | 4 |
| 4. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 264 புதிய பாடப்பிரிவுகள் அறிமுகம்! | 6 |
| 5. | ரூ.21.39 கோடி மதிப்பீட்டில் "தமிழ்நாட்டிற்கான இணைய பாதுகாப்பு கட்டமைப்புத் திட்டம்! | 7 |
| 6. | "பிளாஸ்டிக் இல்லாத தமிழ்நாட்டை " நம் எதிர்கால சந்ததியினருக்கு பரிசளிப்போம்! | 9 |
| 7. | கால்நடை மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு அதற்கான திட்டங்கள் அம்மாவின் அரசால் செயல்படுத்தப்படுகிறது! | 13 |
| 8. | ரூ.115.67 கோடி மதிப்பீட்டில் குறுவை தொகுப்புத் திட்டம்! | 20 |
| 9. | இன்றும், என்றும் தமிழ்நாடு ஒரு மின்மிகை மாநிலமாகத் திகழும்! | 28 |

| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 10. | மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ரூ.1,000 கோடி வங்கிக் கடன்! | 32 |
| 11. | நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.200 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள்! | 35 |
| 12. | தொழில் முனைவோர்களை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கும் பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வருகிறது! | 37 |
| 13. | "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு" உருவாக்கப்படும்! | 40 |
| 14. | 9 மாவட்டங்களில் சட்டம், நீதி நிருவாகத் துறையின் மூலம் பல்வேறு கட்டடங்கள்! | 43 |
| 15. | சிறைகளில் பணிபுரியும் உதவி சிறை அலுவலர்களுக்கு 50 குடியிருப்புகள்! | 45 |
| 16. | 860 அங்கன்வாடி மையக் கட்டடங்களில் உள்ள பழுதுகளை நீக்க ரூ.17.20 கோடி நிதி ஒதுக்கீடு! | 46 |
| 17. | மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, சமவாய்ப்புகளை ஏற்படுத்தி தரும் திட்டங்கள்! | 48 |
| 18. | தமிழ்நாடு வேளாண்மையும், விவசாயிகளின் வாழ்வாதாரமும் செழிக்க ரூ.127.45 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள்! | 50 |
| 19. | கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு வழங்க பொங்கல் 2019 முதல் ஜூன் வரை கூடுதல் உற்பத்தி திட்டம் வழங்கப்படும்! | 55 |

| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 20. | அரசு மருத்துவமனைகள் சிறப்பாகச் செயல்பட்டு ஏழை, எளிய மக்கள் உயர்தர சேவை பெற வழிவகை! | 60 |
| 21. | இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை, "உலகத் தமிழ் அமைப்புகள் மாநாடு" நடத்தப்படும்! | 64 |
| 22. | இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத கிராமப்புற திருக்கோயில்களிலும் திருப்பணி மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்! | 67 |
| 23. | பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவிக்கும் திட்டம்! | 68 |
| 24. | அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை கண்டறிந்து வெள்ள தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்! | 70 |
| 25. | பணிக்காலத்தில் நோயினால் பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் மருத்துவ சிகிச்சைக்கான நிதியுதவி ரூ.1 இலட்சமாக உயர்வு! | 71 |
| 26. | 4 மாவட்டங்களில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையங்கள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புதுப்பொலிவு! | 73 |
| 27. | ரூ.10 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய 10 சார்பதிவாளர் அலுவலகங்கள்! | 74 |
| 28. | இஸ்லாமியப் பெருமக்கள் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள இந்த ஆண்டு முதல் ரூ.6 கோடி மானியம்! | 75 |

| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 29. | ரூ.5 கோடி செலவில் 25,000 கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணப் பெட்டகம்! | 77 |
| 30. | பழங்குடியின மக்களுக்கு ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 250 வீடுகள்! | 79 |
| 31. | 3 இடங்களில் உள்ள நவீன அரிசி ஆலை வளாகங்களில் ரூ.90 கோடி மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்ப நெல் சேமிப்பு கலன்கள்! | 80 |
| 32. | நொய்யல் ஆற்றை மாசுபடாமல் சீரமைக்கும் திட்டம்! | 83 |
| 33. | நெடுஞ்சாலைகளில் விபத்துக்கள் ஏற்படும் பகுதிகளை கண்டறிய 25 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் வாகன கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறைகள்! | 84 |


❋ ❋ ❋

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 தேர்வில் பங்கேற்க வயது உச்சவரம்பு உயர்வு!

01.06.2018

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை குறித்த அறிவிப்பினை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற குரூப்-1 பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளில் பங்குபெறுவதற்கான வயது உச்சவரம்பினை உயர்த்திடுமாறு பல்வேறு தரப்பினரிடம் இருந்து அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. அதன் அடிப்படையில், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைய தேர்வுகளுக்கு உள்ள வயது உச்சவரம்பினைப் போல, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப்-1, 1-A, 1-B பணியிடங்களுக்கு தற்போதுள்ள SC/ST/MBC/BC & DNC பிரிவினருக்கான வயது உச்சவரம்பு 35லிருந்து 37 ஆகவும், இதர பிரிவினருக்கு தற்போதுள்ள வயது உச்சவரம்பு 30லிருந்து 32 ஆகவும் உயர்த்தப்படுகிறது என்பதை இப்பேரவைக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# வேளச்சேரியில் ரூ.30 கோடி செலவில், வனத்துறை தலைமை அலுவலகக் கட்டடம்!

## 01.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மிகப் பெரிய வனப்பகுதிகளைக் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். வன வளத்தை மேம்படுத்துவதிலும், காப்பதிலும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே வனத்துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இந்த பேரவையில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாட்டின் இலையுதிர் காடுகள் வறட்சியான காலங்களில் காட்டுத் தீயினால் பாதிப்புக்குள்ளாகக் கூடியவை. பெரும்பாலான காட்டுத் தீ நிகழ்வுகள் மனித தவறுகளால் நிகழ்பவை. காட்டுத் தீயினை கட்டுப்படுத்த வனத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தீயினால் பாதிப்புக்குள்ளாகக் கூடிய காட்டுப் பகுதிகள் பரவலாக உள்ளதால், களத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு காட்டுத் தீயினை கட்டுப்படுத்தவும், துரதிருஷ்டவசமாக அத்தீயில் சிக்கிக் கொள்ளும் மக்களை மீட்க சிறப்பு பயிற்சி மற்றும் அடிப்படை உபகரணங்கள் வழங்கவும் 2 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. தற்போது வனத்துறை தலைமை அலுவலகம் பனகல் மாளிகையில் செயல்பட்டு வருகிறது. அங்குள்ள இடப்பற்றாக்

குறையை கருத்தில் கொண்டு, வேளச்சேரியில் அமைந்துள்ள வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் வனத்துறை தலைமை அலுவலகக் கட்டடம் 70,000 சதுர அடி பரப்பளவு கொண்ட இரு தொகுதி கட்டடங்களாக 30 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

3. வனச் சரகங்களுக்கு வழங்கிட 125 புதிய ஜீப்புகள், 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும்.

4. தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியின மக்களின் கலாச்சாரம் மற்றும் சூழல் நட்பு வாழ்க்கையை அடையாளம் கண்டு, அவர்களின் கலாச்சார வளமையை மேம்படுத்தவும், இயற்கை நட்பு வாழ்க்கை முறையைத் தெரியப்படுத்தவும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் புலிகள் காப்பக புற எல்லைப் பகுதியில் அருங்காட்சியகம் மற்றும் பழங்குடியினர் சூழல் கலாச்சார கிராமம் ஒன்று 7 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். இது தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியை பெரிய அளவில் ஏற்படுத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# ரூ.42.92 கோடி செலவில் அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 2,283 திறன் வகுப்பறைகள் (Smart Classes)!

## 01.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு அளப்பரிய முக்கியத்துவம் அளித்து வந்தார். மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்பட்டு வரும் அம்மாவின் அரசு தொடர்ந்து ஏழை, எளிய மாணவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பள்ளிக் கல்வித்துறை சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

**1.** பள்ளி மாணாக்கர்களின் நலன் கருதி அனைத்துப் பள்ளிகளிலும் குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதலாக குடிநீர் வசதிகள் தேவைப்படும் **2,448** அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் **48** கோடியே **96** இலட்சம் ரூபாய் செலவில் சுத்தமான மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

**2.** அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தகவல் தொழில்நுட்ப உதவியுடன் அனைத்துப் பாடங்களையும் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாக **2,283** திறன் வகுப்பறைகள் (Smart Classes) 42 கோடியே **92** இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

3. நடப்பு கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட உள்ள புதிய பாடத்திட்டத்தினை மாணவர்களுக்கு சீரிய முறையில் பயிற்றுவிக்க ஏதுவாக, அனைத்து ஆசிரியர்களுக்கும் பணியிடை பயிற்சி வழங்கப்படும். மேலும், தலைமை ஆசிரியர்கள் அவர்களது தலைமைப் பண்பினை மேம்படுத்திக்கொள்வதற்காக பயிற்சியும், ஆய்வு அலுவலர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், தேசிய ஆசிரியர் தகவுக்கான (National Teacher Portal) கட்டகங்கள் (Modules) உள்ளீடு செய்தல் சார்ந்த பயிற்சியும் மற்றும் இதர பயிற்சிகளும் 35 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

4. மாவட்டத்திற்கு ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி வீதம் 32 மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 32 பள்ளிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கல்வி கற்பிக்கும் தரத்தை மேலும் உயர்த்தும் வகையிலும், வளர்ந்துவரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, இப்பள்ளிகள் மாதிரிப் பள்ளிகளாக செயல்படும் விதத்தில், ஒரு பள்ளிக்கு 50 இலட்சம் ரூபாய் வீதம் 16 கோடி ரூபாய் செலவில் மாதிரி பள்ளிகள் உருவாக்கப்படும்.

5. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அரசு பள்ளிகளில் மாணவர்களுக்கான திறன் அட்டை வழங்கும் முன்னோடித் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திறன் அட்டையில் பல்வேறு புதிய அம்சங்கள் மற்றும் ஆதார் எண் இணைக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்ட திறன் அட்டையாக நடப்பு கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு நிதிஉதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவிகளுக்கும் 11 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 264 புதிய பாடப்பிரிவுகள் அறிமுகம்!

## 01.06.2018

**மா**ண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

கடந்த ஏழு வருடங்களில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 56 அரசு / பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 4 அரசு பொறியியல் கல்லூரிகள், 19 அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு உயர்கல்வித் துறையில் இந்த ஆண்டு செயல்படுத்த உள்ள புதிய திட்டங்களை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாட்டிலுள்ள 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அனைத்தும் நடப்பு கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்படும். இதற்கென ஆண்டிற்கு 152 கோடியே 20 இலட்சம் ரூபாய் தொடரும் செலவினம் ஆகும்.

2. 2011–2012 முதல் 2017–2018ஆம் கல்வியாண்டு வரை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,232 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. 2018–2019ஆம் கல்வியாண்டில் 264 புதிய பாடப் பிரிவுகள் (68 இளங்கலை, 60 முதுகலை, 136 ஆராய்ச்சி) அறிமுகப்படுத்தப்படும். இப்பாடப் பிரிவுகளை கையாளுவதற்கு 683 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்படும். இதற்கென அரசுக்கு தொடரும் செலவினமாக 68 கோடியே 46 இலட்சம் ரூபாய் ஏற்படும். இப்பாடப் பிரிவுகளின் தேவைக்கென 324 வகுப்பறை கட்டடங்கள், 50 ஆய்வகங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகள் 62 கோடியே 75 இலட்சம் ரூபாயில் அமைக்கப்படும்.

3. தமிழ்நாட்டில் பர்கூர், கோயம்புத்தூர், காரைக்குடி, சேலம், திருநெல்வேலி மற்றும் வேலூரில் உள்ள 6 அரசு பொறியியல் கல்லூரிகளிலுள்ள அரசு விடுதிகளில் தலா 150 மாணாக்கர்கள் தங்குவதற்கு ஏதுவாக 3 நபர்கள் தங்கும் வசதியுள்ள 50 அறைகள் கொண்ட விடுதிகள் 37 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# ரூ.21.39 கோடி மதிப்பீட்டில் “தமிழ்நாட்டிற்கான இணைய பாதுகாப்பு கட்டமைப்புத் திட்டம்”

## 01.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அளப்பரிய வளர்ச்சியினை அடைந்து இருக்கின்ற தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் பொதுமக்களுக்கான சேவைகளை விரைந்து வழங்கி வருகின்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, அதனை முன்னெடுத்து செல்ல பல நடவடிக்கைகளை முனைப்புடன் எடுத்து வருகிறது.

அந்த வகையில், நடப்பாண்டில் பின்வரும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

1. தொழில் முனைவோர்களுக்கு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த வணிகத்தை தொடங்க ஏதுவாக, கோயம்புத்தூர் மாவட்டம், விளாங்குறிச்சியில் உள்ள எல்கோசெஸ்ஸில் 2 இலட்சத்து 50 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் திருச்சியில் ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், இரண்டு தகவல் தொழில்நுட்பக் கட்டடங்கள் கட்டப்படும்.

2. தமிழ்நாடு அரசின் தகவல் தொழில் நுட்பவியல் உட்கட்டமைப்புகளான TNSWAN, TNSDC மற்றும் தமிழ்நாடு

அரசால் செயல்படுத்தப்படும் மின் ஆளுமை சேவைகளை இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் தடைகளிலிருந்து கண்காணித்து, தடங்கலற்ற மற்றும் பாதுகாப்பான இணைய சேவையினை வழங்கும் பொருட்டு "தமிழ்நாட்டிற்கான இணைய பாதுகாப்பு கட்டமைப்பு திட்டம்" (Cyber Secuirty Architecture for Tamil Nadu) 21 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எல்காட் நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் தடையற்ற இணையவழி சேவைகள் மற்றும் அரசு துறைகளின் தரவுகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

**3.** தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் அதன் சந்தாதாரர்களுக்கு தற்போது தரமான வரையறையில் (SD-Standard Definition) டிஜிட்டல் கேபிள் டிவி சேவை வழங்கி வருகிறது. அதனை மேம்படுத்தும் விதமாக, உயர் வரையறை (HD-High Definition) தரத்தில் மிக துல்லியமான சேவையை "HD செட்டாப் பாக்ஸ்" வாயிலாக வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

❋ ❋ ❋

# “பிளாஸ்டிக் இல்லாத தமிழ்நாட்டை” நம் எதிர்கால சந்ததியினருக்கு பரிசளிப்போம்!

## 05.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இன்று, ஜூன் 5, “உலக சுற்றுச்சூழல் தினம்”. சமுதாயம் நலமாக வாழவும், வளமுள்ள நாடு உருவாகவும் இன்றியமையாததாக விளங்குவது சுற்றுச்சூழல். இத்தினத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்க நாம் உறுதி எடுப்போம். சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சூழல் துறை மூலமாக புரட்சிகரமான திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றினார்கள். அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு தொடர்ந்து அதனை பின்பற்றி வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள், “பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஆய்வு செய்யும் வல்லுனர் குழு” என்ற சிறப்புக் குழுவினை அமைத்தார்கள்.

இந்த வல்லுனர் குழு, ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் குவளைகள் போன்ற பொருட்களை தடை செய்யவும், பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் வாழை இலைகள், பாக்குமட்டை தட்டுகள், தாமரை இலைகள் போன்றவற்றின் பயன்பாட்டினை ஊக்குவிக்கவும் ஆலோசனை வழங்கியது.

இவற்றில், அன்றாடம் மக்களுக்கு தேவைப்படும் பால், தயிர், எண்ணெய், மருத்துவப் பொருட்களுக்கான உறைகள் போன்ற

பொருட்களுக்கான பிளாஸ்டிக் உறைகளுக்கு மட்டும் விலக்கு அளிக்க பரிந்துரைத்துள்ளது.

ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள், நிலங்களில் தேங்கிவிடும் போது, நீர்நிலைகளை நோக்கிச் செல்லும் நீரின் போக்கு மாறி, நீர் தேங்கி விடும் நிலை உருவாகிறது. மேலும், கழிவு நீர் செல்லும் பாதைகளிலும் இதன் பாதிப்புகள் அதிக அளவில் உள்ளது. இதனால் தண்ணீர் மாசடைகிறது. மேலும் மழைநீர், பூமியில் கசிந்து நிலத்தடியினை அடையாமல் போவதால், நிலத்தடி நீர் மட்டம் உயர்வதும் பாதிக்கப்படுகிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தேங்கி இருக்கும் பிளாஸ்டிக் கழிவுகளில் மழைநீர் தேங்கும்போது, கொசு உற்பத்தியாகி, அதன் மூலம் மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் பரவுகின்றன. மேலும், மழைநீர்க் கால்வாய்களில் அடைப்புகள் ஏற்பட்டு, வெள்ளப் பெருக்கு ஏற்படவும் காரணமாகிவிடுகிறது. மண் வளமும் பாதிக்கப்படுகிறது.

தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் எரிக்கப்படும்போது, அதன் மூலம் வெளியாகும் நச்சு வாயுவின் மூலமாக மனிதன் மற்றும் உயிரினங்கள் சுவாசிக்கும் காற்றும் மாசடைகிறது.

உணவுப் பொருட்களுடன் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் பிற உணவுகளுடன் சேர்ந்து உண்ணும் நிலை ஏற்படுவதனால், கால்நடைகள் மற்றும் வன விலங்குகளின் உயிரிழப்புக்கும் பிளாஸ்டிக் பொருட்கள் காரணமாகி விடுகிறது.

மேலும், பிளாஸ்டிக் பொருட்கள், பல ஆண்டுகள் ஆனாலும் மக்காத தன்மை உடையதால், அவற்றை அழிப்பதோ, ஒழிப்பதோ இயலாத காரியம். இவ்வாறு நிலம், நீர், காற்று போன்ற பல்வேறு நிலையில் மாசு ஏற்பட்டு, மனித உயிருக்கும், சுகாதாரத்திற்கும் பிளாஸ்டிக் பொருட்கள் பெரும் தீங்கு விளைவிக்க காரணமாகி விடுகிறது. எனவே, இவற்றை அறவே தவிர்ப்பது இன்றைய சூழ்நிலையில் கட்டாயமாகிறது.

மேற்படி பாதிப்புகளை கருத்தில் கொண்டும், இந்தத் தீங்கினை நம் எதிர்கால சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லக்கூடாது என்ற உயரிய நோக்கத்திலும், தமிழ்நாட்டில் 2019ஆம் ஆண்டு, ஜனவரி 1 முதல் பால், தயிர், எண்ணெய், மருத்துவப் பொருட்களுக்கான உறைகள் தவிர, தடிமன் வேறுபாடின்றி, இதர மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் தேநீர் / தண்ணீர்க் குவளைகள், தண்ணீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் உறிஞ்சு குழல் மற்றும் பிளாஸ்டிக் கைப்பைகள், பிளாஸ்டிக் கொடிகள் உள்ளிட்ட பொருட்களை தயாரித்தல், விற்பனை செய்தல், சேமித்து வைத்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றை சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986இன் கீழ் தடை செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவு செய்து, தமிழ்நாடு முழுவதும் தடை செய்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுமக்களும், வியாபாரிகளும் மேற்படி பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக, துணிப் பைகள், காகித உறைகள் போன்ற மக்கும் பொருட்களைப் பயன்படுத்த பழகிக்கொள்ள ஏதுவாக, மேற்படி தடைகளை உடனடியாக அமல்படுத்தாமல், 2019, ஜனவரி மாதம் 1ஆம் தேதி முதல் அமல்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டமான ‘மழைநீர் சேகரிப்புத் திட்டம்’, பொதுமக்களின் ஒத்துழைப்போடும், பங்களிப்போடும், வெற்றிகரமாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு, நிலத்தடி நீர் பெரிய அளவில் செறிவூட்டப்பட்டது.

அதே போன்று, உலக சுற்றுச்சூழல் தினமான இன்று, உங்கள் அனைவரின் ஒத்துழைப்போடும், பங்களிப்போடும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்த இருக்கும் “பிளாஸ்டிக் இல்லாத தமிழ்நாட்டை” நம் எதிர்கால சந்ததியினருக்கு பரிசளிப்போம்! என்று கூறி அமர்கிறேன்.

✵ ✵ ✵



# கால்நடை மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு அதற்கான திட்டங்கள் அம்மாவின் அரசால் செயல்படுத்தப்படுகிறது!

## 06.06.2018

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் கால்நடைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், சமூகப் பொருளாதார மாற்றங்களை உருவாக்குவதிலும், வேலை வாய்ப்புகளை தோற்றுவிப்பதிலும் முக்கியப் பங்காற்றி வரும் சத்துள்ள உணவான பாலின் உற்பத்தியைப் பெருக்கவும், பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதாயமான விலை கிடைக்கவும், நுகர்வோருக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் தங்கு தடையின்றி நியாயமான விலையில் கிடைக்கவும் தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. எனவே தான், கால்நடை மேம்பாட்டிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அதற்கான திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே, மாண்புமிகு அம்மாவின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, இத்துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**1.** அனைத்து கால்நடை நிலையங்களுக்கும் சிறந்த கால்நடை மருத்துவ சேவைகளை வழங்க ஏதுவாக, சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு அம்மாவின் அரசு அமைத்து வருகின்றது. அதன் அடிப்படையில் இதுவரை,

1,895 கால்நடை நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில், 30 கால்நடை நிலையங்களுக்கு 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

2. கால்நடை வளர்ப்போருக்கும் விவசாயிகளுக்கும் மருத்துவம் மற்றும் ஈனியல் சம்பந்தமான நோய்களால் ஏற்படும் பொருளாதார இழப்பை தவிர்க்க, நவீன நோய் கண்டறியும் கருவிகளை கால்நடை நிலையங்களுக்கு வழங்குவது அவசியமாகும். அதனடிப்படையில், மாவட்டத்திற்கு ஒரு கால்நடை நிலையத்திற்கு என்ற அளவில், 32 கால்நடை நிலையங்களுக்கு தலா ஒரு நுண்ணலை நுண்ணாய்வுக் கருவியும், ஒரு கணினிமயமாக்கப்பட்ட ஊடுகதிர் கருவியும், 8 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

3. தமிழ்நாட்டில் தற்போது 6 மாநகராட்சிகளில் கால்நடை பன்முக மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய நிலையங்களை பிற மாநகராட்சிகளிலும் ஏற்படுத்தும் நோக்கோடு திண்டுக்கல், தஞ்சாவூர், வேலூர், தூத்துக்குடி, திருப்பூர் மற்றும் ஈரோடு மாநகராட்சிகள் ஒவ்வொன்றிலும் ஒரு கால்நடை நிலையம் கால்நடை பன்முக மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும். இந்த பன்முக மருத்துவமனைகளுக்கு அறுவை சிகிச்சைக்கூடம், உள்நோய் சிகிச்சை வசதி, நுண்ணலை நுண்ணாய்வுக் கருவி மற்றும் கணினிமயமாக்கப்பட்ட ஊடுகதிர் கருவி போன்ற வசதிகள் 6 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். அவை 24 மணி நேரமும் செயல்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 26 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் 32 மாவட்டங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக, மேலும் 2 புதிய கால்நடை

நோய் புலனாய்வுப் பிரிவுகள், 2 கோடி ரூபாய் செலவில் நாமக்கல் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் தோற்றுவிக்கப்படும்.

4. கோமாரி நோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் மூலம் மாநிலத்தின் 32 மாவட்டங்களில் 93.89 இலட்சம் மாட்டினங்களுக்கு 15ஆவது மற்றும் 16ஆவது சுற்று தடுப்பூசிப்பணி முறையே செப்டம்பர், 2018 மற்றும் மார்ச், 2019 ஆகிய மாதங்களில் 24 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

5. தமிழ்நாட்டில் நாட்டுக்கோழி முட்டை மற்றும் இறைச்சியின் தேவை அதிகரித்துள்ளதால், புழக்கடை கோழி வளர்ப்புத் தொழில் பெருமளவில் வெற்றியடைந்துள்ளது. எனவே, புழக்கடை கோழி வளர்ப்பை மேலும் ஊக்குவிக்க சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களிலும் 38,500 பெண் பயனாளிகளுக்கு, தலா 50 கோழிகள், 25 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

6. திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் தற்போது 280 மாணவர்கள் பயிலுகிறார்கள். இம்மாணவர்களுக்கு கூடுதல் கட்டமைப்பு வசதிகளாக கூடுதல் வகுப்பறைகள், தேர்வு அறைகள், விடுதி வசதிகள் மற்றும் எச்.டி. மின்சக்தி ஆகிய பணிகள் ஒவ்வொரு கல்லூரிக்கும், தலா 14 கோடி ரூபாய் வீதம் 28 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

7. சென்னை பெருநகர நுகர்வோர்களின் பெருகி வரும் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் பால்பண்ணைகளின் கொள்ளளவை விரிவாக்கம் செய்ய வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகிறது. அதனடிப்படையில், தற்பொழுது நாளொன்றுக்கு 3.5 இலட்சம் லிட்டர் என்ற கையாளும் திறன் கொண்ட மாதவரம் மத்திய பால்பண்ணை, 10 இலட்சம் லிட்டர் பாலை கையாளும் திறன் கொண்ட புதிய தானியங்கி நவீனமயமாக்கப்பட்ட

பால் பண்ணையாக 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், விரிவாக்கம் செய்யப்படும்.

8. சேலம் பால்பண்ணையின் பால் பதப்படுத்தும் திறன் நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து, 7 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு அதிகரிக்கப்படும். மேலும், நாளொன்றுக்கு 30 மெட்ரிக் டன் டெய்ரி ஒயிட்னர் தயாரிக்கும் புதிய தொழிற்சாலை 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

9. வேலூர் – திருவண்ணாமலை மாவட்ட ஒன்றிய பால்பண்ணை நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்டது. தற்போதுள்ள பால்பண்ணை இயங்கும் இடம் பெங்களூர் நெடுஞ்சாலையில் பாலாறுக்கு அருகே அமைந்துள்ள காரணத்தினால், தற்போதுள்ள இடத்திலேயே விரிவாக்க பணிகள் மேற்கொள்வது இயலாததாக உள்ளது. இதனால், நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட புதிய பால்பண்ணை, 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்நுட்ப கலை நயத்துடனும், கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள், தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் பால் பதப்படுத்தும் உபகரணங்களுடன் புதிய இடத்தில் உருவாக்கப்படும்.

10. தஞ்சாவூர் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 55,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இப்பால்பண்ணை 25,000 லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் மட்டுமே கொண்டுள்ளது. இது ஒரு இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட, பால் பொருட்கள் தயாரிக்கும் வசதிகளுடன் கூடிய தானியங்கி பால்பண்ணையாக 75 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

11. மாவட்ட ஒன்றியங்களின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடனும், நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், 30 மாவட்டங்களில்

மொத்தம் 500 பாலகங்கள் தலா 4 இலட்சம் ரூபாய் வீதம், 20 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

**12.** திருச்சி ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 5,000 லிட்டர் ஐஸ்கிரீம் தயாரிக்கும் திறன் கொண்ட தொழிற்சாலை 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும். இந்த ஐஸ்கிரீம் தயாரிக்கும் தொழிற்சாலை, அதிநவீன வசதிகளுடன் கூடிய தானியங்கி ஐஸ்கிரீம் கலவை தயாரிக்கும் கருவி, கெட்டியாக்கும் அரை தானியங்கி சிப்பங்கட்டும் இயந்திரம், குளிரூட்டும் அமைப்பு மற்றும் குளிர்பதன சேமிப்பு அறைகள் கொண்டதாக அமையும்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அவர்களின் வருவாயை பெருக்குவதற்கு முன்னோடி திட்டங்களைத் தீட்டி, மீனவர் நலன் காக்க மீன்பிடித் தடை காலத்தில் நிவாரணத் தொகை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது.

**13.** ஆழ்கடல் மீன்களை கையாளுவதற்கு ஏற்ற தரமான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், சென்னை மீன்பிடி துறைமுகத்தில் தற்போதுள்ள இட நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், ஒரு சூரை மீன்பிடி துறைமுகம் 200 கோடி ரூபாய் செலவில், திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூர் குப்பத்தில் அமைக்கப்படும். இந்த மீன்பிடி துறைமுகம், ஆழ்கடல் சூரை மீன்பிடிப் படகுகள் கொண்டு வரும் மீன்களை கையாளுவதற்கும், ஏலமிடுவதற்கும், ஏற்ற உலகத் தரம் வாய்ந்த நவீன வசதிகளுடன் அமைக்கப்படும்.

**14.** கடலூர் முதுநகரில், தற்போதுள்ள மீன்பிடி துறைமுகம், படகுகளை நிறுத்துவதற்கும், மீன்களை ஏலமிடுவதற்கும், வலை பின்னுவதற்குமான உலகத் தரம் வாய்ந்த கூடுதல் கரையோர வசதிகளுடன், 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

15. கன்னியாகுமரி மாவட்டம் 72 கி.மீ நீள கடற்கரை கொண்ட மாவட்டமாகும். ஒவ்வொரு கிலோ மீட்டர் தூரத்திற்கும் ஒரு மீனவ கிராமத்தை கொண்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்ட கடற்கரையோரங்களை தாக்கிய "ஒகி" புயல் மற்றும் சமீபத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் வள்ளவிளை, மார்த்தாண்டம்துறை மற்றும் நீரோடி கிராமங்களில், மீனவர்களின் வீடுகளும் உடைமைகளும் பலத்த சேதம் அடைந்தன. எனவே, அம்மீனவர்களின் இருப்பிடம் மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்களை ஆபத்தான அலைகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் வகையில் மேற்படி மூன்று மீனவ கிராமங்களில் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறைந்த நீளமுள்ள தூண்டில் வளைவுச் சுவர்கள் அமைக்கப்படும்.

16. தற்போது தமிழ்நாட்டில் திலேப்பியா மீன் வளர்ப்பானது மிக லாபம் தரக்கூடிய ஓர் தொழிலாக வளர்ந்து வருகிறது. இதை கருத்தில் கொண்டு, திண்டுக்கல் மாவட்ட, பாலாறு புரந்தலாறு அணையில் திலேப்பியா மீன் தொழில் முனைவோர் பூங்கா, 6 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறி அமைகிறேன்.

❋ ❋ ❋



# ரூ.115.67 கோடி மதிப்பீட்டில் குறுவை தொகுப்புத் திட்டம்!

## 08.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் திருச்சி, கடலூார், புதுக்கோட்டை, அரியலூார், கரூர் மாவட்டங்களில் உள்ள குறுவை சாகுபடி செய்யும் பகுதிகளில், பிரதானமாக மேட்டூர் அணையின் நீர் இருப்பை பொறுத்தே குறுவை நெல் சாகுபடி அமைகிறது. வழக்கமாக, மேட்டூர் அணையின் நீர் மட்டம் 90 அடியாக இருக்கும் நிலையில், குறுவை நெல் சாகுபடிக்கு ஜுன் 12ஆம் தேதி அன்று பாசனத்திற்காக அணை திறக்கப்படும். அவ்வாறு ஜுன் 12ஆம் தேதியன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டால், மேற்கண்ட பகுதிகளில் 3.15 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும்.

கடந்த 6 ஆண்டுகளாக, மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால், ஜுன் 12ஆம் தேதியன்று அணையினை பாசனத்திற்கு திறக்க இயலவில்லை. எனினும், டெல்டா வேளாண் பெருமக்களின் நலனையும், அவர்களின் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகள் நிலத்தடி நீரினைக் கொண்டு குறுவை நெல் சாகுபடியினை மேற்கொள்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில், 2012ஆம் ஆண்டு 12 மணி நேர முன்முனை மின்சாரமும், 2013ஆம் ஆண்டிலிருந்து குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் அறிவித்து, செயல்படுத்தி வந்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் பெருமுயற்சியினாலும், வேளாண் பெருமக்களின் ஏகோபித்த ஆதரவினாலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தபட்சம் 2.07 இலட்சம் ஏக்கரிலிருந்து அதிகபட்சமாக 3.16 இலட்சம் ஏக்கர் வரையிலும், குறுவை நெல் சாகுபடி செய்து சாதனை படைக்கப்பட்டது. அதன் விளைவாக,

2012ஆம் ஆண்டில் 2.3 இலட்சம் மெட்ரிக் டன்னும்,

2013ஆம் ஆண்டில் 3.4 இலட்சம் மெட்ரிக் டன்னும்,

2014ஆம் ஆண்டில் 4.3 இலட்சம் மெட்ரிக் டன்னும்,

2015ஆம் ஆண்டில் 4.9 இலட்சம் மெட்ரிக் டன்னும்,

2016ஆம் ஆண்டில் 5 இலட்சம் மெட்ரிக் டன்னும்

அரிசி உற்பத்தி செய்து வேளாண் பெருமக்களால் சாதனை நிகழ்த்தப்பட்டது.

சென்ற ஆண்டு, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்படி, கருநாடகா தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு நீரினை விடுவிக்காததால், மேட்டூர் அணையின் நீர் இருப்பு குறுவை நெல் சாகுபடி செய்ய போதுமானதாக இல்லை என்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, சென்ற ஆண்டில் குறுவை சாகுபடி செய்யும் நெல் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, 56 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் குறுவை தொகுப்புத் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தியது.

மாண்புமிகு அம்மாவின் அரசு சட்ட ரீதியாக தொடர்ந்து போராடியதன் விளைவாக, மத்திய அரசு, காவேரி நதி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைத்து

**01.06.2018** அன்று அரசிதழில் வெளியிட்டது. அதன்படி, தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்களை காவேரி நீர் மேலாண்மை ஆணைய உறுப்பினராகவும், நீர்வள ஆதாரத் துறையின் திருச்சி மண்டல தலைமைப் பொறியாளரை காவேரி நீர் முறைப்படுத்தும் குழு உறுப்பினராகவும் நியமனம் செய்து, **01.06.2018** அன்று மத்திய அரசிற்கு தெரிவிக்கப்பட்டது. கேரள அரசு தன்னுடைய பிரதிநிதியை **06.06.2018** அன்று நியமனம் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. புதுச்சேரியும் தனது பிரதிநிதியை பரிந்துரை செய்து அனுப்பியுள்ளது. கர்நாடகா மட்டும் அதன் உறுப்பினர்களை நியமனம் செய்து இன்று வரை மத்திய அரசுக்கு பரிந்துரையை அளிக்கவில்லை என்று தெரிய வருகிறது.

டெல்டா மாவட்ட விவசாயிகள் பெரிதும் எதிர்பார்க்கின்ற குறுவை நெல் சாகுபடியை குறித்த நேரத்தில் துவக்கிட, காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை உடனே அமைத்து நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என்று நாடாளுமன்ற துணை சபாநாயகர் அண்ணன் முனைவர் மு.தம்பிதுரை அவர்கள் தலைமையில், அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு மத்திய நீர்வள ஆதாரத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. நிதின் கட்கரி அவர்களை **06.06.2018** அன்று டெல்லியில் நேரில் சந்தித்து, எனது **05.06.2018** ஆம் நாளிட்ட கடிதத்தை அளித்தனர். காவேரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவராக மத்திய நீர்வள குழுமத்தின் தலைவர் திரு. மசூத் உசைன் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், பிற மாநிலங்கள் அவற்றின் உறுப்பினர்களை நியமிக்காமல் இருந்தாலும் கூட, இந்த ஆணையத்தின் கூட்டம் விரைவில் கூட்டப்படும் எனவும் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இக்கூட்டம் நடைபெற்று டெல்டா விவசாயிகளுக்கு உரிய தண்ணீர் கிடைக்கும் வரை, மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும். இவ்வாறான மாண்புமிகு அம்மா அரசின்

நடவடிக்கைகள் மூலமாக விரைவில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு நீர் கிடைக்கும் என நம்புகிறேன்.

தற்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் 39.42 அடியாக மட்டுமே உள்ளது. வினாடிக்கு 2,190 கன அடி மட்டுமே நீர்வரத்து வந்து கொண்டிருக்கின்றது. இதைக் கொண்டு, குறுவை நெல் சாகுபடிக்காக வழக்கமாக திறக்கப்படும் நாளான ஜூன் 12ஆம் தேதியன்று அணையினை திறந்து விட இயலாத சூழ்நிலை உள்ளது. கால்வாய் பாசனம் இல்லாத காலங்களில் இதர நீர் ஆதாரங்களான வடிமுனைக் குழாய் மற்றும் ஆழ்துளை கிணறுகளிலிருந்து பெறப்படும் நீரினைக் கொண்டு டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்படும். எனவே, தண்ணீரை மிகவும் சிக்கனமான முறையில் பயன்படுத்தி, நடப்பாண்டில் குறுகிய கால நெல் மற்றும் பயறு வகைப் பயிரையும் சாகுபடி செய்வதற்காக, இந்த ஆண்டின் குறுவை தொகுப்புத் திட்டத்தினை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அதன்படி,

- ❖ கடந்த ஆறு ஆண்டுகளில் வழங்கியது போல், டெல்டா மாவட்டங்களுக்கு இந்த ஆண்டும் விவசாயத்திற்கு 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும்.

- ❖ குறுவை பருவத்தில் 79,285 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்வதற்கேற்ற வகையில், அதிக மகசூல் தரும் நெல் ரகங்களை குவிண்டாலுக்கு 1,750/– ரூபாய் மானியம் வீதம் 15,857 குவிண்டால் நெல் விதைகளை மானிய விலையில் விநியோகிப்பதற்கு 2 கோடியே 77 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

- ❖ வேளாண் இயந்திரங்களைக் கொண்டு நெல் நடவு வயலை குறித்த காலத்தில் திறம்பட தயார் செய்வதற்காக, 870 பவர் டில்லர்களும், 860 ரோட்டவேட்டர்களும்

50 சதவீத மானியத்தில் விநியோகிப்பதற்காக, 11 கோடியே 94 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ டெல்டா பகுதியில் உள்ள நிலத்தடி நீரை பயன்படுத்துவதற்கு சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பதிவு செய்த விவசாயிகள் தங்கள் விண்ணப்பத்தை திரும்பப்பெற முன்வந்தால், 90 சதவீத மானியம் வழங்கப்படும். டெல்டா பகுதிகளில் 500 சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்கள் நிறுவுவதற்காக 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ மின் இணைப்பு கிடைக்கப் பெறாத டெல்டா விவசாயிகளுக்கு உதவும் வகையில், 2 ஆயிரம் டீசல் இன்ஜின்கள், 50 சதவீத பின்னேற்பு மானியத்தில் வழங்குவதற்காக, 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். இத்தகைய வேளாண் இயந்திரங்களை மானியத்தில் பெறுவதற்கு, இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ள உழவன் கைபேசி செயலி மூலம் பதிவு செய்து கொள்ளுமாறு விவசாயிகளை கேட்டுக்கொள்கிறேன்.

❖ நடவு இயந்திரங்களை கொண்டு நெல் நடவு செய்ய ஏக்கருக்கு 4,000/– ரூபாய் வீதம், ஒரு இலட்சம் ஏக்கர் பரப்புக்கு இயந்திர நடவு மேற்கொள்ள, 100 சதவீத மானிய உதவித் தொகை வழங்கப்படும். இதற்காக தமிழ்நாடு அரசு 40 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்யும். நுண்ணூட்டச் சத்து குறைபாடுள்ள 40,000 ஏக்கர் பரப்பளவில், நெல் நுண்ணூட்டக் கலவை 50 சதவீத மானியத்தில் விநியோகிக்கப்படும்.

❖ டெல்டா மாவட்டங்களில் துத்தநாக சத்து குறைபாடு உள்ள இடங்களில், துத்தநாக சல்பேட் உரத்தை பயன்படுத்துவதற்கு,

பின்னேற்பு மானியமாக ஏக்கருக்கு 200 ரூபாய் வீதம், 80 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுக்கு, ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், 30 ஆயிரம் ஏக்கரில் ஜிப்சம் பயன்படுத்துவதற்காக ஏக்கருக்கு முழு மானியமாக 600 ரூபாய் வீதம் பின்னேற்பு மானியமாக ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

❖ குறைந்த நாட்களில், குறைந்த நீரில், அதிக லாபம் தரக்கூடிய பயறு வகைப் பயிர்களை 12,500 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்வதற்கு, 60 சதவீத மானியத்தில் தரமான விதைகள், 50 சதவீத மானியத்தில் திரவ உயிர் உரங்கள், பயறு நுண்ணூட்டக் கலவை மற்றும் இலை வழி டிஏபி உரம் தெளிக்கவும், ஒரு கோடியே 13 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ பயறு வகைகளில், சிக்கனமாக பாசன நீரைப் பயன்படுத்தும் வகையில், 2,000 தெளிப்பு நீர் பாசன அமைப்புகளை நிறுவுவதற்கு சிறு குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து 100 சதவீத மானியமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்குவதற்காக ஒரு கோடியே 99 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ காவேரி டெல்டா மற்றும் கல்லணை பாசனத்தின் கடைமடைப் பகுதியான வெண்ணாறு பகுதியின் மண் வளத்தினை அதிகரிக்கும் வகையில், பசுந்தாள் உர பயிர் சாகுபடி 15,000 ஏக்கரில் மேற்கொள்ள ஏக்கர் ஒன்றுக்கு 1,200/– ரூபாய் மானியத்தில் பசுந்தாளுர பயிர் விதைகள் விநியோகிக்கப்படும்.

❖ டெல்டா மாவட்ட விவசாயிகள், நிலத்தடி நீரை சிக்கனமாக பயன்படுத்தி, குறுவை சாகுபடி பரப்பினை அதிகரிக்கும்

நோக்கில், 4 அங்குல விட்டம் மற்றும் 6 மீட்டர் நீளத்தில் 30 PVC குழாய்கள் கொண்ட அலகு ஒன்றுக்கு 15,000/– ரூபாய் வீதம் 1,500 அலகுகளுக்கு மானியம் வழங்குவதற்காக, 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ டெல்டா மாவட்டங்களில், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மட்டுமல்லாது, வேளாண் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், பொருளாதாரத்தை மேம்படுத்தவும், முதன் முறையாக குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தில், வேளாண் தொழிலாளர்களுக்கு உரிய வேலை வாய்ப்பை வழங்கும் வகையில் அமைக்க, மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, வாய்க்கால்களை தூர்வாருதல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், தோட்டக்கலை பயிர் சாகுபடிக்கு குழி எடுத்து நடவு செய்தல், உரக்குழி அமைத்தல் போன்ற பணிகளுடன், சிறு, குறு விவசாயிகளின் வயல்களில் மண் வரப்புகளை அமைத்தல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளுக்கு டெல்டா பகுதிகளில் உள்ள வேளாண் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவர். இதற்காக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் அரசு, 24 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசால் டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலனுக்காக, இன்று 115 கோடியே 67 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த குறுவைத் தொகுப்புத் திட்டத்தின் காரணமாக, டெல்டா மாவட்டங்களில், குறுவை நெல் மற்றும் பயறு சாகுபடி மேற்கொண்டு, உயர் மகசூல் பெறவும், மண்வளம் மேம்படவும்

வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை உடனடியாக துவக்குவதற்கு துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. வேளாண் பெருமக்கள் இதைப் பயன்படுத்திக் கொண்டு குறுவை சாகுபடியினை சிறந்த முறையில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த திட்டங்கள் அனைத்தும், வேளாண் பெருமக்கள் உரிய காலத்தில் சாகுபடி மேற்கொள்வதற்கு ஏதுவாக அறிவிக்கப்பட்டுள்ளன. எனினும், மத்திய அரசினை தொடர்ந்து வலியுறுத்தி, காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைத்து, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, தமிழ்நாட்டிற்கு உரிய நீரினை பெறுவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு துரித தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதையும், விரைவில் காவேரி நீர் மூலம் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு நீர் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

✵ ✵ ✵

# இன்றும், என்றும் தமிழ்நாடு ஒரு மின்மிகை மாநிலமாகத் திகழும்!

## 12.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் வளர்ச்சிக்கு மின்சாரம் பெரும் பங்கு வகிக்கிறது. எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு, மின் திட்டங்களைத் தீட்டி, தமிழ்நாட்டின் மின் நிறுவுத் திறனை கணிசமாக அதிகரித்துள்ளதோடு மட்டுமல்லாமல், அதற்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல தொலைநோக்கு திட்டங்களை முனைப்போடு செயல்படுத்தினார்கள். அதனால், இன்றும், என்றும், தமிழ்நாடு ஒரு மின்மிகை மாநிலமாக திகழும் என்பதில் ஐயமில்லை. நடப்பாண்டில், எரிசக்தித் துறையால் மேற்கொள்ளப்பட உள்ள புதிய மின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் பற்றி இந்த அவையில் அறிவிக்கிறேன்.

1. தமிழ்நாட்டில் பின்வரும் இடங்களில் 5 ஆயிரத்து 68 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 25 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும்.

அ) திருநெல்வேலி மாவட்டம், ஆரல்வாய் மொழி பகுதியில் காற்றாலை மற்றும் சூரிய சக்தி மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளிக்கொணர்வதற்காக, சமூகரெங்கபுரத்தில் ஒரு புதிய 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஆ) கடலூர் மாவட்டம் நெய்வேலி, சிவகங்கை மாவட்டம், கோந்தகை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், பரலி ஆகிய இடங்களில் மொத்தம் மூன்று புதிய 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 1,669 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

இ) உடன்குடி அலகு – 1, 2x660 மெகாவாட் அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியேற்றவும், 2x150 மெகாவாட் இந்த் (IND) பாரத் அனல் மின் நிலையத்தில் இருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியேற்றவும் மற்றும் புதிய காற்றாலை மற்றும் சூரிய சக்தி மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியேற்றவும், தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் 1,039 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

ஈ) சென்னை மாநகரத்தின் மின் கட்டமைப்பை மேம்படுத்த, சென்னை மாவட்டத்தில் கணேஷ் நகர் மற்றும் கே.கே.நகர், திருவள்ளூர் மாவட்டத்தில் ஆவடி மற்றும் எண்ணூர்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் மறைமலை நகர் மற்றும் பல்லாவரம்; ஆகிய ஆறு இடங்களில் 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 932 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

உ) மதுரை மாவட்டத்தில் கே.புதூர், திருநெல்வேலி மாவட்டத்தில் ராஜகோபாலபுரம், திருப்பூர் மாவட்டத்தில் கலிவேலம்பட்டி மற்றும் சேலம் மாவட்டத்தில் எடப்பாடி என மொத்தம் நான்கு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 716 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஊ) திருவண்ணாமலை மாவட்டத்தில் காரப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்தளூர்; நாகை மாவட்டத்தில் ஆச்சாள்புரம், வேலூர் மாவட்டத்தில் மேல்பாடி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பாபநாசம், தருமபுரி மாவட்டத்தில் இலக்கியம்பட்டி, திருப்பூர் மாவட்டத்தில்



பணப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சின்னதடாகம், மதுரை மாவட்டத்தில் தானியமங்கலம் மற்றும் மாணிக்கம்பட்டி ஆகிய 10 இடங்களில் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 110 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

2. தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நீர்த் தேக்கங்களில் நீர் ஆவியாவதை தடுக்கவும் மற்றும் சூரிய சக்தி கட்டாய கொள்முதல் அளவை அதிகரிக்கவும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகமும், இந்திய சூரியசக்தி கழகமும் இணைந்து முதன்முறையாக 250 மெகாவாட் மிதக்கும் சூரியசக்தி மின் நிலையங்களை 1,125 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாத்தியக்கூறின் அடிப்படையில் அமைக்கப்படும்.

3. 65 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள மோயாறு புனல் மின் நிலையத்தின் ஆயுட் காலத்தை மேலும் 25 ஆண்டுகள் நீட்டிப்புச் செய்திடவும், நிறுவு திறனை 3x12 மெகாவாட்டிலிருந்து 3x14 மெகாவாட்டாக அதிகப்படுத்திடவும், 67 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

4. 2023ஆம் ஆண்டு சூரிய எரிசக்தியில் 8,884 மெகாவாட் திறனை அடைவதற்கு ஏதுவாக "சூரிய எரிசக்திக் கொள்கை 2012" மாற்றி அமைக்கப்படும். இதன் மூலம், தமிழ்நாடு சூரிய எரிசக்திக் கொள்கை 2012, மாண்புமிகு அம்மா அவர்களின் தமிழ்நாடு தொலை நோக்குப் பார்வை 2023 மற்றும் தேசிய சூரிய இயக்கம் ஆகியவற்றின் நோக்கங்கள் ஒருங்கிணைக்கப்படும்.

5. மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டுக்கு வழங்கிய தொலைநோக்கு பார்வை 2023 ஆவணத்தின் படி, உயர்ந்த பொருளாதார மற்றும் சமூக குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், புதிய எரிசக்தி கொள்கை ஒன்று உருவாக்கப்படும்.

❋ ❋ ❋

# மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ரூ.1,000 கோடி வங்கிக் கடன்!

## 12.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது ஊரகப் பகுதிகளின் வளர்ச்சியில் தான் இருக்கிறது. எனவே தான், ஊரகப் பகுதி வாழ் மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு நலத் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில், ஊரகப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்காணும் திட்டங்களை அறிவிக்கின்றேன்.

1. ஊரகப் பகுதிகளில், குடியிருப்பு பகுதிகளின் சமையலறை மற்றும் குளியலறைகளிலிருந்து வெளியேறும் திரவக் கழிவு நீர், சாலைகள் மற்றும் தெருக்களில் தேங்கி நோய் தொற்று ஏற்படாமல் பாதுகாக்க, தனிநபர் உறிஞ்சு குழிகளும், ஊரகப் பகுதிகளில், ஆழ்துளை கிணறு, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி போன்ற குடிநீர் அமைப்புகளை சுற்றி கழிவு நீர் தேங்காமல் தடுத்திட சமுதாய உறிஞ்சு குழிகள் என மொத்தம் 2 இலட்சத்து 500 உறிஞ்சு குழிகள் 168 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். இதனால் கழிவு நீர் வடிகட்டப்பட்டு நிலத்தடி நீர் செறிவூட்டப்படும்.

2. ஊரகப் பகுதிகளில் நடப்பாண்டில், 8 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 1,000 அங்கன்வாடி மையங்கள், 87 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

3. பழமையான மற்றும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்களுக்குப் பதிலாக, நடப்பாண்டில் தலா 17 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், 500 புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 88 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

4. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–I-ஐ தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுத்தியதைத் தொடர்ந்து, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் II–னை செயல்படுத்த 2017–2018ஆம் ஆண்டு மத்திய அரசு அனுமதி வழங்கியது. இத்திட்டத்தின்கீழ், நடப்பாண்டில், 192 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 287 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்படும். மேலும், 10 உயர்மட்டப் பாலங்கள் கட்டப்படும்.

5. பல்வேறு வகையான சாலைகளை ஒரே திட்டத்தின் கீழ் மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 1,200 கோடி ரூபாய் செலவில் 5,500 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்படும்.

6. ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதில் ஆழ்துளை கிணறுகள் முக்கிய குடிநீர் ஆதாரங்களாக உள்ளன. உப்பு அல்லது கடின தன்மை மற்றும் குடிநீரில் காணப்படும் இதர குறைகளை சீர்செய்து, பாதுகாக்கப்பட்ட குடிநீரினை மக்களுக்கு வழங்க நடப்பாண்டில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், குக்கிராமங்களில், எதிர் சவ்வூடு பரவல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

7. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அருகாமையில் உள்ள கிராம ஊராட்சிகளுக்கும், அடர்த்தியான மற்றும் அதிகமான மக்கள் தொகை கொண்ட பெரிய கிராம ஊராட்சிகளுக்கும், தெருவில் வைக்கும் 60,000 குப்பைத்

தொட்டிகள் தலா **25,000** ரூபாய் மதிப்பில், **150** கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**8.** ஊரகப் பகுதிகளில் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் **25** ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட வீடுகள் பழுதடைந்துள்ளதால், இவ்வீடுகளை பராமரிப்பு செய்து தரக் கோரி மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் பல்வேறு கோரிக்கைகள் மற்றும் மனுக்கள் தொடர்ந்து வருவதை ஒட்டி, பழுதடைந்த நிலையில் உள்ள **45,594** வீடுகளை ஒரு வீட்டிற்கு **50,000** ரூபாய் வீதம் மொத்தம் **227** கோடியே **97** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழுதுநீக்கம் செய்யப்படும். இதற்கான தொகை மாநில அரசு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

**9.** கடந்த 7 ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு **41,180** கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. **2017–2018**ஆம் ஆண்டில் விதி எண் **110**இன் கீழ் **7,000** கோடி ரூபாய் வங்கிக் கடன் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, அதனை விஞ்சி **8,332** கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கி, **119** சதவீதம் சாதனை எய்தப்பட்டது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசால், மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, நடப்பாண்டில் **11,000** கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.200 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள்!

## 12.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை உயர்ந்த அளவில் நிறைவேற்றிக் கொடுப்பதற்கும், பொது சுகாதாரத்தை பராமரிப்பதற்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு முனைப்பான திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாட்டில் உள்ள 135 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (சென்னை தவிர) 35 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பாதாள சாக்கடைத் திட்டம் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், 3 மாநகராட்சிகள், 25 நகராட்சிகளில் பாதாள சாக்கடை பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவதில் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, ஒரு மாற்று ஏற்பாடாக, கசடுக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்த முடிவெடுத்து 51 நகராட்சிகள் மற்றும் 59 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் 49 நகரங்களில் கசடுக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் 217 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

2. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பாதாள சாக்கடை திட்டம், குடிநீர் திட்டங்களில் குழாய்கள்

பதித்தல் மற்றும் மழையினால் சேதமடைந்த சாலைகளை மறு சீரமைக்கும் பொருட்டு, நடப்பாண்டில் 1,350 கிலோ மீட்டர் நீளத்திற்கு 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

3. பேரூராட்சிப் பகுதிகளில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சாலை மேம்பாட்டுப் பணிகள் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# தொழில் முனைவோர்களை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கும் பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வருகிறது!

## 13.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாக விளங்கும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, சாதகமான தொழில் கொள்கைகளை வகுத்து, தொழில் முனைவோர்களை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கும் பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது. அந்நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

1. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (சிப்காட்) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் உள்ள கண்ணுடையான்பட்டி, கே.பெரியபட்டி மற்றும் சத்திரப்பட்டி ஆகிய வருவாய் கிராமங்களில் சுமார் 1,077 ஏக்கர் பரப்பளவில் ஒரு தொழில் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் சுமார் 5,000 நபர்கள் வேலை வாய்ப்பு பெறுவர். இப்பூங்காவில், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான உட்புறச் சாலைகள், தண்ணீர் வழங்குவதற்கான வசதிகள், மழைநீர் வடிகால் வசதி, சாலையோர மரங்கள் மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற வசதிகள்

**96** கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

**2.** சிப்காட் நிறுவனத்தால், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் உள்ள பெலாப்குப்பம், கொல்லார் மற்றும் வெண்மணியாத்தூர் ஆகிய வருவாய் கிராமங்களில் சுமார் **720** ஏக்கர் பரப்பளவில் ஒரு தொழில் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் சுமார் **5,000** நபர்கள் வேலை வாய்ப்பு பெறுவர். இப்பூங்காவில், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான உட்புறச் சாலைகள், தண்ணீர் வழங்குவதற்கான வசதிகள், மழைநீர் வடிகால் வசதி, சாலையோர மரங்கள் மற்றும் தெரு விளக்குகள் போன்ற வசதிகள், **52** கோடியே **50** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனத்தால் உருவாக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵



# “குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு” உருவாக்கப்படும்!

## 13.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மூலம் செயல்படுத்தப்படவிருக்கும் பின்வரும் அறிவிப்புகளை இப்பேரவையில் வெளியிடுகின்றேன்.

**1)** தொழில்நுட்பம் சார்ந்த புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப பொருட்கள் மேம்படுத்துதலுக்கு உதவி செய்யவும், தொடக்க நிலை தொழில் முனைவோருக்கு ஆரோக்கியமான சூழலை உறுதிப்படுத்தவும், “தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை 2018–2023”–ஐ உருவாக்கி, தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்த உள்ளது. இக்கொள்கையினால், அனைத்துத் துறைகளிலும் உள்ள திறமையுள்ள தனி நபர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் தங்களுடைய புத்தாக்க எண்ணங்களை செயல்படுத்தி, சிறந்த தொழில் முனைவோர்களாக உருவாக்குவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க முடியும். “தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை–2023”–இல் குறிப்பிடப்பட்டுள்ள, ஆண்டுக்கு 11 சதவீத மாநில மொத்த உள்நாட்டு வளர்ச்சி வீதத்தினை அடையும் வகையில் இக்கொள்கை அமையும்.

**2)** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கி வரும் முதலீட்டு மானியச் சலுகைக்கு இணையாக புதிய

தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கும், அதிகபட்ச மானியத் தொகை 25 இலட்சம் ரூபாயிலிருந்து 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

3) 2018–2019ஆம் நிதியாண்டில், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், ஆலத்தூர் கிராமத்தில், 70.33 ஏக்கர் நிலப்பரப்பில், 84 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சிட்கோ தொழிற்பேட்டை– பகுதி 2 நிறுவப்படும்.

4) புத்தாக்க பற்றுச் சீட்டு திட்டம் மூலமாக புத்தாக்கம் சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு புத்தாக்கம் / தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்கள் மூலமாக புத்தாக்கத்தினை உருவாக்குதல் அல்லது கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு பரிசோதனைக் கூடங்கள் மூலமாக முன்மாதிரி மேம்பாடு மற்றும் பொருட்கள் பரிசோதனை செய்வதற்காக மானியம் வழங்கப்படும். உலக அளவில் பல நாடுகளில் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுவருகிறது.இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் புத்தாக்கத் திறனை அதிகரித்தல் ஆகும். இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு 400 தொழில் முனைவோர்களுக்கு புதுமைகளை புகுத்துவதற்காகவும் மற்றும் சிறிய அளவிலான தொழில்நுட்ப சிக்கல்களை அறிவுசார் ஆலோசகர்களுடன் இணைந்து சரி செய்வதற்காகவும், அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாய் வரை மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தை செயல்படுத்த ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக 20 கோடி ரூபாய் செலவிடப்படும்.

05.06.2018 அன்று இப்பேரவையில் நான் அறிவித்த "ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியக் கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் மீதான தடை" அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும்

விதமாக, எளிதில் மக்கக் கூடிய மாற்றுப் பொருட்களை கண்டறியவும் இத்திட்டம் பெரிதும் உதவும்.

**5)** தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை பன்னாட்டுமயமாக்கவும், வெளிநாட்டு ஒத்துழைப்பைப் பெறவும், தமிழ்நாட்டில் முதலீட்டை ஈர்க்கவும், "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு" ஒன்று உருவாக்கப்படும். தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு விரைவாகவும், உரிய காலத்திலும் அனுமதி வழங்கவும், ஒற்றைச்சாளர முறையை செயல்படுத்துவதற்காக வேண்டி ஒருங்கிணைப்பு முகமையாகவும் இது விளங்கும். மேலும், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான முதலீடுகளை மேம்படுத்துதல், வணிக அமைப்புகள், தொழிலக அமைப்புகள் மற்றும் முதலீட்டுக் கொள்கையை முன்மொழிபவர்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் படிப்படியாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுதல் ஆகியவற்றையும் ஒருங்கிணைக்கும் முகமையாகவும் இந்த அமைப்பு செயல்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# 9 மாவட்டங்களில் சட்டம், நீதி நிருவாகத் துறையின் மூலம் பல்வேறு கட்டடங்கள்!

## 13.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நீதி நிருவாகம் துறையின் மூலம் செயல்படுத்த உள்ள பின்வரும் அறிவிப்புகளை இப்பேரவையில் அறிவிக்கின்றேன்.

1. கன்னியாகுமரி மாவட்டம், பூதபாண்டியில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு இருசக்கர வாகன நிறுத்தத்துடன் கூடிய கட்டடம் மற்றும் குடியிருப்புகள், 4 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

2. இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம் மற்றும் குடியிருப்புகள், 6 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. கடலூர் மாவட்டம், பண்ருட்டியில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தின் மேல் தளங்களில் சார்பு நீதிமன்றம், கூடுதல் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு கூடுதலாக இரண்டு நீதிமன்ற அறைகள் மற்றும் அலுவலகங்கள், 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

4. தேனி மாவட்டம், ஆண்டிபட்டியில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு உணவகம், இருசக்கர வாகன நிறுத்தத்துடன் கூடிய ஒருங்கிணைந்த கட்டடம் மற்றும் வாகன நிறுத்தத்துடன் கூடிய

இரண்டு குடியிருப்புகள், 6 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

5. விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம், சைக்கிள் நிறுத்தம், வாகன நிறுத்தம், உணவகம், பொது கழிப்பிடம் மற்றும் சுற்றுச் சுவருடன் கூடிய குடியிருப்பு, 8 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

6. திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் மற்றும் குடியிருப்புகள், 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

7. தருமபுரி மாவட்டம் அரூரில் சார்பு நீதிபதி, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

8. திருச்சி மாவட்டம் துறையூரில் உள்ள சார்பு நீதிபதி குடியிருப்பு கட்டடம் கட்டப்படும்.

9. திருவண்ணாமலை மாவட்டத்தில் 6 நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

10. விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சியில் விரைவு நீதிமன்ற நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டப்படும்.

11. கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரத்தில் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

✵ ✵ ✵

# சிறைகளில் பணிபுரியும் உதவி சிறை அலுவலர்களுக்கு 50 குடியிருப்புகள்!

## 13.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறைத் துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

1. சென்னை புழல் மத்திய சிறை–2இல் உள்ள இட நெருக்கடியை கருத்தில் கொண்டு, 500 சிறைவாசிகளை கூடுதலாக அனுமதித்திடும் வகையில், 15 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

2. புழல் மத்திய சிறை–2, வேலூர், கடலூர், திருச்சி, கோயம்புத்தூர், சேலம், மதுரை மற்றும் பாளையங்கோட்டை ஆகிய சிறைகளில் பணிபுரிந்து வரும் உதவி சிறை அலுவலர்களுக்கு 50 குடியிருப்புகள், 10 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. சிறைகளுக்குள் சிறைவாசிகள் செல்லிடத் தொலைபேசியை உபயோகப்படுத்துவதை தடுத்திடும் பொருட்டு, ஏற்கனவே 9 மத்திய சிறைகளில் செல்லிடத் தொலைபேசியை செயலிழக்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக, சென்னை புழல் மத்தியசிறை–1 மற்றும் 2, திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை மற்றும் 5 பெண்கள் தனிச்சிறைகளில் நடப்பாண்டில் 10 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செல்லிடத் தொலைபேசியை செயலிழக்கும் கருவிகள் பொருத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# 860 அங்கன்வாடி மையக் கட்டடங்களில் உள்ள பழுதுகளை நீக்க ரூ.17.20 கோடி நிதி ஒதுக்கீடு!

## 13.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை சார்ந்த பின்வரும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

1. ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் வழங்க தமிழ்நாடு அரசால் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டன. மதுரையில் செயல்படும் அன்னை சத்தியா அரசு குழந்தைகள் காப்பகம், 1986ஆம் ஆண்டிலிருந்து மாநகராட்சி கட்டடத்தில் இயங்கி வருகின்றது. தற்போது இக்கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், ஒரு புதிய கட்டடம், துயிற்கூடம், குழந்தைகள் நலக் குழு அறை, வகுப்பறை, தொழிற் பயிற்சி கூடம் மற்றும் உணவுக் கூடம் ஆகியவை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

2. தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளியில் உள்ள சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் ஒன்று 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ், 54 ஆயிரத்து 439 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு

வருகின்றன. இதில் **46** ஆயிரத்து **397** அங்கன்வாடி மையங்கள் சொந்த கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் **860** அங்கன்வாடி மையக் கட்டடங்களில் உள்ள சிறிய மற்றும் பெரிய வகையிலான பழுதுகளை நீக்கி, சீர்படுத்துவதற்காக தலா **2** இலட்சம் ரூபாய் வீதம், **17** கோடியே **20** இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

* * *

# மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, சமவாய்ப்புகளை ஏற்படுத்தி தரும் திட்டங்கள்!

## 13.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அவர்களின் தன்னம்பிக்கையை வளரச் செய்யவும், சம வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும், அவர்களுக்கென பல கொள்கைகளை வகுத்தும், திட்டங்களைத் தீட்டியும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக,

1. மனவளர்ச்சி குன்றியோர், பார்வைத் திறன் மற்றும் செவித் திறன் குறையுடையோருக்காக செயல்படும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் மதிப்பூதியம் 10,000/– ரூபாயிலிருந்து 14,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் 1,129 சிறப்பாசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் பயன்பெறுவர். இதனால், அரசுக்கு ஆண்டொன்றிற்கு 5 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

2. மாற்றுத்திறனாளிகளுக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்திப் பொருள் விற்பனை மையம் அமைக்க, அவர்கள் ஆவின் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய முன்வைப்பு நிதி 25,000/- ரூபாய் மானியமாக

வழங்கப்படும். முதற்கட்டமாக, 100 நபர்களுக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

3. மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் கீழ் செயல்படும் 301 சிறப்புப் பள்ளிகள் மற்றும் இல்லங்கள் மூலம் 11 ஆயிரத்து 948 மாற்றுத்திறனாளிகள் பயன்பெறுகின்றனர். அவர்களுக்கு தற்போது மாதமொன்றிற்கு வழங்கப்பட்டு வரும் உணவூட்டு மானியம் 650/- ரூபாயிலிருந்து 900/- ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு 3 கோடியே 15 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

# தமிழ்நாடு வேளாண்மையும், விவசாயிகளின் வாழ்வாதாரமும் செழிக்க ரூ.127.45 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள்!

## 14.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், விவசாயப் பெருமக்களின் வளமான வாழ்வுக்கு முக்கியமாக விளங்கும் வேளாண்மை தொழிலை மேம்படுத்துவதற்கும், விவசாயப் பெருமக்களின் வாழ்வு வளம் பெறச் செய்வதற்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

1. தமிழ்நாட்டில் அபரிமிதமாகக் கிடைக்கும் சூரிய சக்தியை, பல்வேறு வழிகளில் பயன்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு "சூரிய சக்திக் கொள்கை" ஒன்றை 2012ஆம் ஆண்டில் உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. இதுவரை, தமிழ்நாட்டில் 3,112 சூரிய சக்தி பம்ப் செட்டுகளும், 181 சூரிய உலர்ப்பான்களும், 117 கோடியே 24 இலட்சம் ரூபாய் மானியத்தில் நிறுவப்பட்டுள்ளன. இலவச மின் இணைப்பை ஏற்கனவே பெற்றுள்ளவர்களும், இலவச மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தவர்களும், மின் இணைப்பை துறப்பதற்கு முன்வந்தால், இத்திட்டத்தின் கீழ், 90 சதவீத மானியத்தில் சூரிய சக்தி மோட்டார் பம்ப் செட்டுகள் அமைத்து தரப்படும்.

தற்போது விவசாயிகளிடையே, சூரிய சக்தி மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு அதிக தேவை இருப்பதை கருத்தில் கொண்டு,

ஏற்கெனவே டெல்டா மாவட்டங்களுக்கு குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்துடன் அறிவிக்கப்பட்ட 500 சூரிய சக்தி மோட்டார் பம்ப் செட்டுகள் போக, டெல்டா மாவட்டங்கள் அல்லாத பிற பகுதிகளுக்கும் 500 சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்டுகள் என மொத்தம் 1,000 சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்டுகள் 50 கோடி ரூபாய் செலவில் 90 சதவீத மானியத்தில் நிறுவப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

2. உடல்நலத்துக்கு தேவையான அனைத்து ஊட்டச் சத்துக்களையும் வழங்கக் கூடிய சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, வரகு, பனிவரகு மற்றும் குதிரைவாலி போன்ற சிறுதானியங்களின் தேவை தமிழகத்தில் அதிகரித்து வருகிறது.

எனவே, சிறுதானியப் பயிர்களின் உற்பத்தியை உயர்த்தும் வகையில், விதை உற்பத்தி மற்றும் விநியோகம், தொகுப்பு செயல் விளக்கம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மற்றும் ஊட்டச் சத்து மேலாண்மை, சிறு தளைகள் விநியோகம் போன்ற பணிகளுக்காக, நடப்பாண்டில் 6 கோடியே 62 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்படும்.

3. வாழை சாகுபடி பரப்பளவில் இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. வாழை அதிக நீர் தேவைப்படும் பயிராகும். தண்ணீர் பற்றாக்குறையினால், வாழை சாகுபடி பரப்பில் குறைவு ஏற்படக்கூடாது என்பதற்காக, வாழை சாகுபடியில் சிக்கன நீர் மேலாண்மைக்காக நடப்பாண்டில் வாழை சாகுபடி மேற்கொள்ளப்படும் 10,000 ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசன முறையினை அமைப்பதற்கு விவசாயிகளுக்கு மானியமாக 27 கோடியே 83 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

4. உயர் தொழில் நுட்பங்களை கடைப்பிடித்தல் மூலம் தரமான உற்பத்தி உறுதி செய்யப்படுகிறது. காய்கறிகளை பசுமைக்குடில், நிழல் வலைக்குடில் போன்ற பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிரிடுதல்,

ஏறுகொடிகள் மற்றும் பற்று கொடிகளான காய்கறி மற்றும் பழங்களுக்கு ஆதாரமாக பந்தல் அமைத்தல், நிலப்போர்வை அமைத்தல் போன்ற தொழில்நுட்பங்களை மேற்கொள்ள 10 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

**5.** தோட்டக்கலைத் துறையில் பட்டயப் படிப்பு படித்த மாணவர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்புகள் உள்ளன. தற்சமயம் சென்னையை அடுத்த மாதவரத்தில் மட்டுமே, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை மூலம் இப்பட்டயப் படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. எனவே அதிகமான மாணவர்களுக்கு இப்பட்டயப் படிப்பு அளிக்க, கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் செயல்பட்டு வரும் தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்திலும், திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரத்தில் இயங்கி வரும் காய்கறி மகத்துவ மையத்திலும், தோட்டக்கலை அறிவியல் சார்ந்த ஈராண்டு பட்டயப் படிப்பு (Diploma in Horticulture) நடப்புக் கல்வி ஆண்டில் துவங்கப்பட்டு, ஆண்டுதோறும் ஒவ்வொரு மையத்திலும் 50 மாணவர்கள் சேர்க்கப்படுவர். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் இணைப்பு அங்கீகாரம் பெற்று இம்மையங்கள், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் செயல்படுத்தப்படும். இவ்விரண்டு மையங்களிலும், மாணவர்கள் பயில்வதற்காக ஏற்கனவே உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடுதல் வசதிகளை உருவாக்குவதற்கு இரண்டு கோடி ரூபாய் நிதி வழங்கப்படும். மேலும், திருவள்ளூர் மாவட்டம் மாதவரத்தில் இயங்கி வரும் ஈராண்டு தோட்டக்கலை பட்டயப் படிப்பு மையமும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இணைப்பு அங்கீகாரம் பெற்று, தோட்டக்கலைத் துறையின் மூலம் நடத்தப்படும்.

**6.** வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை, விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று போன்ற வேளாண் சார்ந்த அனைத்து துறைகளின் விரிவாக்க

சேவைகளையும் ஒரே இடத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் வகையில், அனைத்துத் துறை அலுவலர்களும் ஒரே இடத்தில் இயங்குவதற்கேற்ப, இடுபொருள் சேமிப்புக் கிடங்கு, கருத்தரங்கக் கூட வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் இதுவரை **146** வட்டாரங்களில் **219** கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில், மேலும் **9** வட்டாரங்களில் இம்மையங்கள் **18** கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

7. "மலைகளின் ராணி" என அழைக்கப்படும் உதகமண்டலம், **200** ஆண்டுகாலம் பழமை வாய்ந்ததுடன், பிரதான சுற்றுலா தலங்களில் ஒன்றாக திகழ்கிறது. தற்போது செயல்பட்டு வரும் தாவரவியல் பூங்காவுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, நடப்பாண்டில், நீலகிரி மாவட்டத்தில் **80** ஏக்கர் பரப்பளவில் புதிதாக "இருநூற்றாண்டு பசுமைப் புல்வெளி" எனும் புதிய பூங்கா ஒன்று **10** கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். மேலும், வருடந்தோறும், சுமார் **10** இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் அரசு ரோஜாப் பூங்காவிற்கு வருகை புரிவதால், போக்குவரத்து நெரிசல் அதிகமாகி, வாகனம் நிறுத்துவதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதை கருத்தில் கொண்டு, நீலகிரி நகரத்தில் **500** வாகனங்களை நிறுத்தும் வகையில் வாகன நிறுத்துமிடம் **3** கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

ஆக மொத்தம் **127** கோடியே **45** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இன்று நான் அறிவித்துள்ள இத்திட்டங்கள் மூலம் தமிழ்நாடு வேளாண்மையும், விவசாயிகளின் வாழ்வாதாரமும் மேலும் செழிக்க வழிவகை ஏற்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❋ ❋ ❋



# கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு வழங்க பொங்கல் 2019 முதல் ஜுன் வரை கூடுதல் உற்பத்தி திட்டம் வழங்கப்படும்!

## 14.06.2018

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மைக்கு அடுத்தபடியாக ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவதிலும், நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும், நாட்டின் ஏற்றுமதி வருவாயை பெருக்குவதிலும் முக்கியப் பங்கு வகிப்பது நெசவுத் தொழில். இப்படிப்பட்ட இன்றியமையாத் தொழிலான நெசவுத் தொழிலின் வளர்ச்சிக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு முன்னுரிமை அளித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் இத்துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இப்பேரவையில் அறிவிக்கின்றேன்.

1. விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதை உறுதி செய்தல் மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களின் துணித் தேவையினை பூர்த்தி செய்தல் ஆகிய இரு நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து கைத்தறிகள் மற்றும்

பெடல் தறிகளுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு கீழ்கண்டவாறு கூடுதலாக உற்பத்தி திட்டம் வழங்கப்படும்.

i) கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு, வரும் பொங்கல் 2019 முதல் ஜுன் மாதம் வரை கூடுதல் உற்பத்தி திட்டம் வழங்கப்படும்.

ii) மொத்தமுள்ள பெடல் தறிகளில் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் ஜுலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 6 மாதங்களுக்கு ஏற்கனவே உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டு வரும் 9,692 பெடல் தறிகள் போக எஞ்சிய 1,558 பெடல் தறிகளுக்கு மேற்படி 6 மாத காலம் கூடுதல் உற்பத்தி திட்டம் வழங்கப்படும்.

iii) விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டு வரும் 6,975 பெடல் தறிகள் போக எஞ்சிய 4,275 பெடல் தறிகளுக்கு பிப்ரவரி மாதம் முதல் ஜுன் மாதம் வரை 5 மாதங்களுக்கு விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் கூடுதல் உற்பத்தி திட்டம் வழங்கப்படும்.

iv) ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் வேலைவாய்ப்பின்றி இருக்கும் மொத்தமுள்ள 11,250 பெடல் தறிகளுக்கும் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் ஒரு மாதத்திற்கு கூடுதல் உற்பத்தி திட்டம் வழங்கப்படும்.

இதற்காக ஆண்டொன்றுக்கு அரசுக்கு 15 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

2. ஜவுளித் தொழிலின் வளர்ச்சியை தமிழ்நாட்டில் மேலும் ஊக்குவிக்கும் விதமாக, நடப்பாண்டில் தமிழ்நாடு அரசின் சார்பாக

கோயம்புத்தூரிலுள்ள கொடிசியா அரங்கில் பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி 2 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.

3. தமிழ்நாடு அரசின் விலையில்லா சீருடைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சீருடைத் துணிகளை பதனீடு செய்வதை முக்கிய பணியாக கொண்டு தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. சீருடைத் துணிகளை பதனிடுவதன் மூலம் இவ்வாலை பிப்ரவரி முதல் ஆகஸ்ட் முடிய 7 மாதங்கள் முழுமையாக செயல்படுகிறது. மீதமுள்ள 5 மாதங்கள் பதனிடுவதற்கு போதுமான துணி இல்லாததால் குறைந்த திறனுடன் செயல்பட்டு வருகிறது. இந்நிலையை கருத்திற்கொண்டு இங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சீருடைத் துணி பதனீட்டு பணி இல்லாத காலங்களில் தொடர் வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடன் ஆலையை தொடர்ந்து இலாபத்தில் இயக்க செய்யவும், ஒரு தொகுதிக்கு (Unit) 2 டன் வீதம் 60எஸ் கோம்டு நூல் சாயமிடும் திறன் கொண்ட சாயமிடும் அலகு 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

4. தமிழ்நாடு, தேசிய அளவில் வெண்பட்டு உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் தலா 20 இலட்சம் பட்டு முட்டைகளை பதனம் செய்யும் திறன் கொண்ட இரண்டு பல்நிலை குளிர்பதன அலகுகள் கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரிலும், கிருஷ்ணகிரியிலும் செயல்பட்டு வருகின்றன. வெண்பட்டு முட்டை உற்பத்தியினை அதிகரித்து அதனை பதனப்படுத்திட, மேலும் ஒரு, 20 இலட்சம் பட்டு முட்டைகளைப் பதனம் செய்யும் திறன் கொண்ட பல்நிலை குளிர்பதன அலகு, ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

5. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளை முழுவதுமாக பயன்படுத்தி பட்டு நூல் உற்பத்தி செய்ய, போதுமான பட்டு நூற்பு அலகுகள் இல்லை என்பதால், பட்டுக் கூடுகளுக்கு

பிந்தைய பட்டு நூற்பு பிரிவினை வலுப்படுத்தும் நோக்கில் நடப்பாண்டில் பட்டு நூற்பு அலகுகளை நிறுவிட மாநில அரசின் பங்காக நிதியுதவி பின்வருமாறு வழங்கப்படும்.

அ) 400 முனைகள் கொண்ட மூன்று தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் நிறுவிட, 1 கோடியே 5 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

ஆ) 200 முனைகள் கொண்ட ஒரு தானியங்கி பட்டு நூற்பு அலகினை நிறுவிட, 19 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

இ) ஒரு தானியங்கி டூபியான் பட்டு நூற்பு அலகினை நிறுவிட, 11 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

ஈ) 100 முனைகள் கொண்ட பல்முனை பட்டு நூற்பு அலகுகள் 25 நிறுவிட, மாநில அரசின் பங்காக 1 கோடியே 6 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

உ) இரண்டு தனியார் பட்டு முறுக்கேற்றும் அலகுகளும், ஒரு அரசு பட்டு முறுக்கேற்றும் அலகும் நிறுவிட, 10 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

* * *



# அரசு மருத்துவமனைகள் சிறப்பாகச் செயல்பட்டு ஏழை, எளிய மக்கள் உயர்தர சேவை பெற வழிவகை!

## 25.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தரமான மருத்துவ சேவையை அனைத்து மக்களும், குறிப்பாக ஏழை, எளிய மக்கள் பெற்றிட வேண்டும் என்ற அடிப்படையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் நடப்பாண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறையால் செயல்படுத்தப்பட இருக்கும் புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுகிறேன்.

1. இன்றைய காலகட்டத்தில், வாழ்க்கை முறை மாற்றத்தினால் ஏற்படுகின்ற தொற்றா நோய்களை தடுப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும், யோகா மற்றும் இயற்கை மருத்துவம் பெரும்பங்கு வகிக்கிறது. இந்தியாவிலேயே முதல்முறையாக, தமிழ்நாட்டில் தான் சர்வதேச தரத்தில் யோகா மற்றும் இயற்கை மருத்துவத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, உலகத்தரம் வாய்ந்த "சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையம்" செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 60 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு பட்டப்படிப்பு பிரிவு, பட்ட மேற்படிப்பு பிரிவு மற்றும் ஆராய்ச்சிப்

பிரிவுடன் கூடிய மருத்துவமனை, மாணவர் விடுதிகள், பணியாளர் குடியிருப்புகள் போன்றவை ஏற்படுத்தப்பட்டு, இதற்குத் தேவையான பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். இங்கே இயற்கையான சூழ்நிலையில், மிகவும் பாதுகாப்பான சிகிச்சை முறைகளான யோகா சிகிச்சை, இயற்கை உணவு சிகிச்சை, நீர் சிகிச்சை, அக்குபங்க்சர், அக்குபிரஷர், காந்த சிகிச்சை, இயற்கை மூலிகை சிகிச்சை, மண் சிகிச்சை, மசாஜ் சிகிச்சை, நிற சிகிச்சை போன்ற பல சிகிச்சைகள் அளிக்கப்படும்.

**2.** தமிழ்நாட்டில் உள்ள **985** துணை சுகாதார நிலையங்கள், ஒருங்கிணைந்த சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையங்களாக, **82** கோடியே **2** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**3.** சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனைத்து சிறப்பு துறைகளும் ஒரே அடுக்குமாடி கட்டடத்தில் செயல்படும் வகையில், தற்போது கட்டப்பட்டுள்ள சிறப்பு அடுக்குமாடி கட்டடத்தில், **4**ஆவது தளம் முதல் **6**ஆவது தளம் வரை, மேலும் மூன்று தளங்கள் **55** கோடியே **55** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**4.** சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில், நோயாளிகளின் வசதிகளை கருத்தில் கொண்டு, தற்போதுள்ள வெளி நோயாளிகள் பிரிவு கட்டடத்திலேயே அனைத்து துறைகளும் செயல்படும் விதத்தில், தற்போது கட்டப்பட்டு வரும் புறநோயாளிகள் பிரிவு கட்டடத்திற்கு மேல், **5**ஆவது தளம் முதல் **8**ஆவது தளம் வரை, மேலும் நான்கு தளங்கள், **42** கோடியே **88** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**5.** சீர்காழி, திருத்தணி, ஓமலூர், திருச்செந்தூர், பரமக்குடி, பண்ருட்டி, ஆரணி ஆகிய அரசு வட்ட மருத்துவமனைகளுக்கு பெருகி வரும் நோயாளிகளின் எண்ணிக்கையை கருத்தில்

கொண்டு, அவர்களுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்திட, 30 கோடி ரூபாய் செலவில் தரை தளம் மற்றும் இரண்டு தளங்கள் கொண்ட கூடுதல் கட்டடம் கட்டப்படும்.

6. மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சைக்காக, "பிரேக்கி" தெரப்பியுடன் கூடிய "சி.டி.ஸ்டிமுலேட்டர்" மற்றும் "பங்க்கர்" கருவிகள் 22 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

7. சாலை விபத்துக்களில் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைத்திட, "தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர கால சிகிச்சைத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 20 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 25 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் 19 வட்ட மருத்துவமனைகள் என 64 அரசு மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டு வரும் அவசர கால சிகிச்சை மையங்களுக்கு, நவீன மருத்துவக் கருவிகள், 21 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

8. காச நோயாளிகளுக்கு சிறந்த ஊட்டச்சத்து வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, நடப்பாண்டில் 96 ஆயிரத்து 200 காச நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து உணவு 20 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

9. தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் நலன் காக்கும் வகையில், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் "மகப்பேறு மற்றும் குழந்தை நல ஒப்புயர்வு மையம்" ஒன்று 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

10. நடப்பாண்டில், காஞ்சிபுரம், நீலகிரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்பட்டு வரும் அரசு செவிலியர் பயிற்சி பள்ளிகளில், மாணவியர் விடுதிகள் 20 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

11. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநரகத்தின் கீழ், 12 அரசு துணை செவிலியர் பயிற்சி பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சிப் பள்ளிகளின் உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், நடப்பாண்டில் எழும்பூர், பூவிருந்தவல்லி மற்றும் விழுப்புரம் ஆகிய மூன்று இடங்களில் உள்ள துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு, 17 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

தற்போது நான் அறிவித்துள்ள, இந்த திட்டங்களால் அரசு மருத்துவமனைகள் மேலும் சிறப்பாகச் செயல்பட்டு, ஏழை, எளிய மக்கள் உயர்தர மருத்துவ சேவை பெற வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

* * *

# இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை "உலகத் தமிழ் அமைப்புகள் மாநாடு" நடத்தப்படும்!

## 28.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்து மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகவும், சீரிளமை குன்றாத மொழியாகவும், வளமையும், தூய்மையும் மிக்க மொழியாகவும், வாழும் நெறிக்கும் இலக்கணம் வகுத்த மொழியாகவும், வீரம் செறிந்த மொழியாகவும் விளங்குகின்ற தமிழ் மொழிக்கு பெருமை சேர்ப்பதிலும், அதனை உலகமெங்கும் பரப்புவதிலும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, தமிழ் மொழியை சிறப்பிப்பதை முன்னெடுத்து செல்லும் விதமாக, இத்துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இப்பேரவையில் அறிவிக்கின்றேன்.

1. பேறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலம் தமிழ்ச் சமூகத்திற்குப் பாடுபட்டவர்களின் வாழ்வியலைப் பன்முக நோக்கில் ஆராய்ந்து, வளரும் தலைமுறையினரும் எதிர்கால தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில், ஆய்வுகள் நடத்தப்பட்டு நூல்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. அவ்வகையில் முன்னாள் முதலமைச்சர் மக்கள் திலகம் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டைப் போற்றும் வகையிலும் மற்றும் சமூகத்தின் மீதான அவரின் ஆழ்ந்த அக்கறை, கலைத் தொண்டு, தமிழ் உணர்வு மற்றும் மக்கள் பணி ஆகியவற்றை நம் நாட்டு மக்களும், வெளிநாட்டவர்களும் அறிந்துகொள்ளும் வகையில்

ஆய்வுகள் மேற்கொள்ளவும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாடு ஆய்வு இருக்கை ஒன்று ஒரு கோடி ரூபாய் வைப்புத் தொகையாக வைத்துத் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**2.** இந்தியாவிலுள்ள முன்னணி பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை ஏற்படுத்தி, தமிழ் வளர்க்கும் அற்புதமான திட்டம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தான் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, முதற்கட்டமாக இலண்டனில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், தென்னாப்பிரிக்காவில் உள்ள ஜோகனஸ்பார்க் பல்கலைக்கழகம், மலேசியாவிலுள்ள மலேயா பல்கலைக்கழகம், இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மற்றும் தமிழர்கள் அதிகமாக வாழும் வெளிநாடுகள் மற்றும் பிற மாநிலங்களில் உள்ள கல்வி நிறுவனங்களிலும் தமிழ் இருக்கைகள் தொடர்ந்து நிறுவப்படும். இதற்கென ஆண்டுதோறும் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3.** உலக நாடுகள் மற்றும் இந்திய மாநிலங்களில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்கள், தாய்மொழியையும், கலையையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாக்கும் நோக்கில், அங்குள்ள தமிழ் அமைப்புகளை ஒருங்கிணைத்து, அவர்கள் மேற்கொண்டு வரும் தமிழாய்வுகள், தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள், மொழி பெயர்ப்புகள் போன்ற தமிழ் இலக்கியப் பணிகளை ஒன்றிணைக்கும் வகையில், ஆய்வரங்குகள், கருத்தரங்குகள், கவியரங்குகள், சொற்பொழிவு, பட்டிமன்றம், இலக்கியச் சுற்றுலா, உலகத் தமிழர் கலைத் திருவிழா உள்ளிட்ட நிகழ்வுகளை உள்ளடக்கிய உலகத் தமிழ் அமைப்புகள் மாநாடு 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை 5 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.

4. ஆங்கில மொழி அறிஞர்கள், ஆங்கில மொழிச் சொற்களை தொகுத்தல் முறையில் அணியமாக்கி, மொழி ஆராய்ச்சி செய்யும் அறிஞர்களுக்கு வழங்கி வருகின்றனர். அதுபோல், உலகின் பழமையான மொழிகளுள் மூத்த மொழியாகக் கருதப்படும் நம் தமிழ் மொழியிலும் அத்தகைய தொகுப்பு தேவை என்பதை உணர்ந்து, "சொற்குவை" என்ற திட்டம் தொடங்கப்படும். இதில் தமிழில் உள்ள சொற்கள் அனைத்தையும் தொகுத்து நிரல்படுத்துதல், சொற்களின் இலக்கண வகைப்பாடுகளைப் பதிவு செய்தல், நிகரான சொற்களை பதிவு செய்தல், சொற்களின் தொடராக்கப் பரிமாணங்களைப் பதிவு செய்தல், சொற்களுக்கான பொருள் விளக்கத்தைத் தேடும் வசதியை அமைத்துக் கொடுத்தல், அடிக்கடி தேடப்படும் சொற்களுக்கு வண்ண அடையாளம் கொடுத்தல், வந்த சொல்லே மீளவும் வராமல் தடுத்தல் மற்றும் புதிய சொற்களைப் பதிவு செய்தல் போன்ற வசதிகள் உருவாக்கப்பட்டு, அவை இணையதளப் பொது வெளியில் உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும், மொழியியல் ஆராய்ச்சியாளர்களும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டு வெளியிடப்படும். இதற்கென ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் தொடர் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும்.

5. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதுகலை தமிழ் (M.A.) பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், இவ்வாண்டு முதல் ஆண்டுதோறும் தெரிவின் அடிப்படையில் முதலாம் ஆண்டு பயிலும் 15 மாணவர்கள், இரண்டாம் ஆண்டு பயிலும் 15 மாணவர்கள் என மொத்தம் 30 மாணவர்களுக்கு மாதந்தோறும் கல்வி உதவித் தொகையாக தலா 2,000/– ரூபாய் வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ஆண்டுக்கு 7 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத கிராமப்புற திருக்கோயில்களிலும் திருப்பணி மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்!

## 28.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்து சமய அறநிலையத்துறை குறித்த கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

1. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் பக்தர்கள் வசதிக்காக 'பக்தர்கள் தங்கும் விடுதி' 30 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

2. இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிதி வசதி இல்லாத 1,000 கிராமப்புற திருக்கோயில்களில், நடப்பாண்டில் திருப்பணி மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள, திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம், 10 கோடி ரூபாய் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும்.

3. இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள 1,000 திருக்கோயில்களில் நடப்பாண்டில் திருப்பணிகள் மேற்கொள்ள, திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம், 10 கோடி ரூபாய் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

❋ ❋ ❋

# பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவிக்கும் திட்டம்!

## 28.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**உ**டற்கல்வி மற்றும் விளையாட்டு ஆகிய இரண்டும், உடற்திறனை வளர்ப்பதோடு, திடமான மன வலிமையையும், சகோதர மனப்பான்மையையும், சமூக நல்லிணக்கத்தையும் உருவாக்கிட பெரிதும் உதவுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, விளையாட்டு வளர்ச்சிக்கென சிறப்பான விளையாட்டு கட்டமைப்பு வசதிகள், ஊக்க உதவித் திட்டங்கள், முறைப்படுத்தப்பட்ட பயிற்சிகள் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதனை முன்னெடுத்துச் செல்ல, பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

1. வேலூர் மாவட்டத்தில், 400 மீட்டர் தடகள ஓடுபாதை, பார்வையாளர் மாடம், நிருவாக அலுவலகம், வளைகோல் பந்து, கூடைப் பந்து, கபடி, கோ–கோ, இறகுப் பந்து, டென்னிஸ் ஆகியவற்றிற்கான ஆடுகளங்கள், நீச்சல் குளம், உடற்பயிற்சிக் கூடம் மற்றும் இதர விளையாட்டு வசதிகளைக் கொண்ட மாவட்ட விளையாட்டு வளாகம் 17 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

2. பல்வேறு விளையாட்டு வீரர்களின் திறன்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு தகுந்த முறையில் பயிற்சிகள் அளித்து சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கும் வகையில், “பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவிக்கும்

திட்டம்'' செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 5 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்/ வீராங்கனைகள் உட்பட, 50 விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கும், வெளிநாடுகளில் சென்று சிறப்பு பயிற்சி மேற்கொள்வதற்கும் மற்றும் போட்டிகளில் கலந்து கொள்வதற்கும், மானியமாக தேவையின் அடிப்படையில் தலா 10 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். இதற்கென ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபாய் செலவிடப்படும்.

3. காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நீர்ப்பெயர் கிராமத்தில் தேசிய மாணவர் படையினருக்கு பயிற்சி வளாகம் அமைக்க 2.02 ஹெக்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் அணிவகுப்பு பயிற்சி மைதானம், தடை தாண்டுதல் பயிற்சி நிலையம், 25 மீட்டர் மற்றும் 50 மீட்டர் தூரம் சுடக் கூடிய துப்பாக்கி சுடும் தளம் ஆகியவற்றை கொண்ட தேசிய மாணவர் படை பயிற்சி வளாகம், 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இந்த பயிற்சி வளாகத்தில் ஒரே சமயத்தில் 600 மாணவர்கள் வீதம், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 18,000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

4. இறகுப் பந்தாட்ட போட்டிகளில் சர்வதேச அளவில் பதக்கங்கள் வெல்லக் கூடிய திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். அவர்களை ஊக்குவிக்கும் வகையில், ஒரு "இறகுப்பந்து அகாடமி'' தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இப்பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பல்வேறு விளையாட்டு அறிவியல் ஆய்வகங்களைப் பயன்படுத்தி வீரர்களின் திறமைகளை அடையாளம் கண்டு, சர்வதேச போட்டிச் சூழலுக்கு ஏற்றவாறு அவர்களைத் தயார் செய்ய இந்த அகாடமி உதவும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

❋ ❋ ❋

# அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை கண்டறிந்து வெள்ள தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்!

## 29.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளை இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன்.

வடகிழக்கு பருவமழை காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கின் விளைவாக அடையாறு, ஆரணியாறு, கொசஸ்தலையாறு, கூவம் மற்றும் கோவளம் ஆற்றுப்படுகைகளில், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர் மற்றும் ஊரக பகுதிகளிலுள்ள குடியிருப்புகள் நீரில் மூழ்குகின்ற நிலைமை அவ்வப்போது ஏற்படுகின்றது.

அப்பகுதிகளில் வெள்ள தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக நடப்பாண்டில் மாநில நிதியிலிருந்து 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளைக் கண்டறிந்து, அப்பகுதிகளில் வெள்ளநீர் தங்கு தடையின்றி வெளியேற்றப்படும் வகையில், தொடர்புடைய ஏரிகளுக்கு இணைப்பு கால்வாய்கள் அமைத்தல், மூடிய கால்வாய்களை புனரமைத்தல், பாசனமில்லாத ஏரிகளை ஆழப்படுத்தி நீர்த் தேக்கங்களாக மாற்றுதல், வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்பினை ஏற்படுத்துதல், உபரி நீர் கால்வாய்கள் மற்றும் சாலையோர கால்வாய்களை அகலப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# பணிக்காலத்தில் நோயினால் பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் மருத்துவ சிகிச்சைக்கான நிதியுதவி ரூ.1 இலட்சமாக உயர்வு!

## 29.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. உலகத் தமிழர்களின் இதயங்களில் தங்க சிம்மாசனம் இட்டு அமர்ந்திருப்பவரும், திராவிட ஆட்சி தமிழ்நாட்டில் நிலை பெற வித்திட்டவரும், தன்னை ஈன்ற தமிழகத்திற்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டி பெருமை சேர்த்தவருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தை புதுப்பித்தல், பதிக்கப்பட்டுள்ள கிரானைட் கற்களைப் புதுப்பித்தல், புல்வெளி சீரமைத்தல், மின் பணிகள் மற்றும் இதர புனரமைப்புப் பணிகள் 4 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

2. சமூக நீதிக்காக பாடுபட்டவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான மறைந்த மரியாதைக்குரிய திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், அவரது பிறந்த தினமான செப்டம்பர் 16ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்படும்.

3. கலைமாமணி, பத்மஸ்ரீ, பத்மபூஷன், செவாலியே, தாதாசாகேப் பால்கே ஆகிய விருதுகளைப் பெற்று நடிகர் திலகம் என்று மக்களால் போற்றப்பட்ட மறைந்த திரு சிவாஜி கணேசன் அவர்கள் கலைத் துறைக்கு ஆற்றிய

சேவையை போற்றிடும் வகையில், அவரது பிறந்த தினமான அக்டோபர் 1-ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்படும்.

பத்திரிகையாளர்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே அவர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

4. பத்திரிகையாளர் பெற்று வரும் ஓய்வூதியத்தை 8 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியத்தை 4,750 ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாகவும் கடந்த ஆண்டு மாண்புமிகு அம்மாவின் அரசு உயர்த்தி வழங்கியது. மேற்படி ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்கொடையின் உச்சவரம்பு மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பு, 2 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

5. பணிக்காலத்தில் பத்திரிகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட நேர்ந்தால், அவர்கள் சிகிச்சை மேற்கொள்ள ஏதுவாக பத்திரிகையாளர் நல நிதியம் மூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி, ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

✵ ✵ ✵

# 4 மாவட்டங்களில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையங்கள், ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புதுப்பொலிவு!

## 29.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடப்பாண்டில் செயல்படுத்தவிருக்கும் அறிவிப்புகளை இப்பேரவையில் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வாடிக்கையாளர்களை கவரவும், சந்தை வாய்ப்பினை பெருக்கவும், விற்பனை நிலையங்களை புதுப்பித்து நவீனமயமாக்கும் நோக்கில், சென்னை, கொல்கத்தா, திருச்சி மற்றும் தஞ்சாவூரில் செயல்பட்டு வரும் பூம்புகார் விற்பனை நிலையங்கள், ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பொலிவு பெற அழகுபடுத்தப்படும்.

2. பூம்புகார் நிறுவனம் சார்பில் நடப்பாண்டு முதல், உலக அளவிலான கண்காட்சி (Handifest) ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடத்தப்படும். சர்வதேச வர்த்தக நிறுவனங்களான இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் (ITPO) மற்றும் கைவினை பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் (EPCH) உடன் இணைந்து இக்கண்காட்சி 2 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும். கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் கைவினைப் பொருட்களுக்கு மிகச்சிறந்த சந்தை வாய்ப்பு ஏற்படுத்துவதற்கும், வருவாய் பெருக்குவதற்கும், ஏற்றுமதி அதிகரிப்பதற்கும் மற்றும் அன்னிய செலாவணி ஈட்டுவதற்கும் இக்கண்காட்சி வழிவகுக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

✵ ✵ ✵

# ரூ.10 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய 10 சார்பதிவாளர் அலுவலகங்கள்!

## 03.07.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும் வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வந்துள்ளது. அதன் அடிப்படையில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 10 சார்பதிவாளர் அலுவலகங்கள், நவீன வசதிகளுடன் கூடிய அலுவலகங்களாக 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# இஸ்லாமியப் பெருமக்கள் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள இந்த ஆண்டு முதல் ரூ.6 கோடி மானியம்!

## 03.07.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

1) மத்திய அரசு ஆண்டுதோறும் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமிய சமூகத்தினருக்கு மானியம் அளித்து வந்தது. இந்த மானியத்தை 2018ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு நிறுத்தியுள்ளது. இந்துக்களுக்கு மானசரோவர் மற்றும் முக்திநாத் செல்ல வழங்கப்படும் மானியத்தைப் போலவும், சிறுபான்மை இன மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, கிறிஸ்தவர்களுக்கு ஜெருசலம் செல்ல வழங்கப்படும் மானியத்தைப் போலவும், இஸ்லாமிய பெருமக்கள் ஹஜ் புனிதப் பயணத்தை மேற்கொள்வதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 6 கோடி ரூபாய் மானியம் வழங்கும். இத்திட்டத்தின் கீழ் 3,728 நபர்கள் இந்த ஆண்டு (2018–2019) ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வர் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2) மாநிலம் முழுவதும் செயல்பட்டு வரும் 502 பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதிகளில் 31,940 மாணவியர்

தங்கிப் பயின்று வருகின்றனர். இவர்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு, இவ்விடுதிகளின் நான்கு பகுதிகளிலும், விடுதி ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவில் 502 விடுதிகளுக்கும் 5 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் CCTV Camera பொருத்தப்படும்.

3) தமிழ்நாடு முழுவதும் மொத்தம் உள்ள 1,343 விடுதிகளில் 1,265 விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இவ்வாறு சொந்தக் கட்டடத்தில் இயங்கி வரும் 1,265 விடுதிகளில், சுமார் 595 விடுதிகளுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்பது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதன் அடிப்படையில், நடப்பாண்டில் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இவ்விடுதிகளில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

4) மதுரை மாவட்டத்தில் மதிப்பனூர் மற்றும் மேலத் திருமாணிக்கம், தேனி மாவட்டத்தில் மு.பெருமாள்பட்டி மற்றும் பாலார்பட்டியில் உள்ள 4 அரசு கள்ளர் தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும்;

மதுரை மாவட்டத்தில் கொ.புளியங்குளம், அ.புதுப்பட்டி மற்றும் வி.பெருமாள்பட்டி ஆகிய 3 அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும்;

தேனி மாவட்டம்–அன்னஞ்சி, திண்டுக்கல் மாவட்டம்–தெப்பத்துப்பட்டி மற்றும் மதுரை மாவட்டம்–கோவிலாங்குளம் ஆகிய 3 அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், என மொத்தம் 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் 3 கோடியே 8 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்படும் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

# ரூ.5 கோடி செலவில் 25,000 கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணப் பெட்டகம்!

## 03.07.2018

**தொ**ழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட இருக்கும் புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுகின்றேன்.

1. கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் முதற்கட்டமாக, 25,000 கட்டுமான தொழிலாளர்களுக்கு தலா 2,000/– ரூபாய் மதிப்புள்ள பாதுகாப்பு உபகரணங்கள் கொண்ட பெட்டகம் 5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். இப்பெட்டகத்தில் பாதுகாப்பு காலணிகள், பாதுகாப்பு தலைகவசம், பளிச்சிடும் மேலங்கி, கையுறைகள் மற்றும் பாதுகாப்பு கண்ணாடிகள் இருக்கும்.

2. கோவையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலகங்களுக்கு 4 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

3. தமிழ்நாட்டில் தற்போது உள்ள 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 29 அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. நடப்பாண்டில், கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் தலா 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

4. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலமாக 32 மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு திறன்பயிற்சி திட்டங்களை, தற்போது 5 மண்டல இணை இயக்குநர்கள் கண்காணித்து வருகின்றனர். அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் திறன் பயிற்சி வழங்கும் நிறுவனங்களை திறம்பட நிர்வகிக்கவும், கண்காணிக்கவும், விழுப்புரம் மற்றும் சேலம் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகங்கள் நடப்பாண்டில் 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

5. அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கு 7 கோடி ரூபாய் செலவில் "சிடி ஸ்கேன் கருவி" வழங்கப்படும். ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் 3 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் அவசர சிகிச்சைப் பிரிவு (ICU) உருவாக்கப்படும். 75 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் உள்ள ஆய்வகங்களில் 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் "செமி ஆட்டோ அனலைசர், பைனாகுலர் மைக்ராஸ்கோப், இசிஜி இயந்திரம்" போன்ற புதிய உபகரணங்கள் வழங்கப்படும். தொழிலாளர்களுக்கு சிகிச்சைக்காக வழங்கப்படும் உயர் மருந்துகளை பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் 4 மண்டல நிருவாக மருத்துவ அலுவலகங்களில் குளிர்சாதன அறை மற்றும் ஜெனரேட்டர் கருவிகள் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

* * *

# பழங்குடியின மக்களுக்கு ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 250 வீடுகள்!

## 05.07.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 1,367 விடுதிகளில், தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு அவர்தம் உடமைகளை பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு ஏற்கனவே அறையில் அமைக்கப்பெற்றிருக்கும் R.C. அலமாரிகளுக்கு, மாணாக்கர் எண்ணிக்கைக்கேற்ப, தனித்தனி இரும்புக் கதவு மற்றும் பூட்டு, சாவி ஏற்பாடுகளுடன் கூடிய வசதிகளை ஏற்படுத்தி தர விடுதி ஒன்றிற்கு 2 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 27 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரும்பு அலமாரிகள் நடப்பாண்டில் அமைக்கப்படும்.

2. திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், தருமபுரி மற்றும் வேலூர் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள பழங்குடி இன மக்களுக்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 வீடுகள் வீதம் மொத்தம் 250 வீடுகள் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். மேலும், அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட, திறனுக்கு ஏற்ப தொழில் துவங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 நபர்களைக் கொண்ட 5 குழுக்களை அமைத்து, ஒரு குழுவிற்கு 10 இலட்சம் ரூபாய் வீதம், 25 குழுக்களுக்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# 3 இங்களில் உள்ள நவீன அரிசி ஆலை வளாகங்களில் ரூ.90 கோடி மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்ப நெல் சேமிப்பு கலன்கள்!

## 05.07.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலம் சிறப்பான திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்துகிறது. அதன் அடிப்படையில், கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

1. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சென்னை தெற்கு மண்டலத்திலுள்ள போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டும், தேவையின் அடிப்படையிலும், புறநகர் பகுதியான மறைமலை நகரில், நவீன தொழில்நுட்பம் மற்றும் இயந்திர பயன்பாட்டுடன் கூடிய மூன்றடுக்கு கிடங்கு வளாகம் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பொள்ளாச்சி, திருவாரூர், தாழையூத்து ஆகிய இடங்களில் உள்ள நவீன அரிசி ஆலை வளாகங்களில் தலா 15,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் நவீன தொழில்நுட்ப நெல் சேமிப்பு கலன்கள், 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

3. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளில் நவீன இயந்திரங்களான Forklift, Stacker cum loader, Automatic

Weighing and Packing Machine நிறுவி தானியங்கி கிடங்குகளாக, 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 300 சொந்த கிடங்கு கட்டடங்களில் உள்ள கல்நார் கூரை தகடுகளை அகற்றி, நவீன கூரை அமைப்பான, வர்ணம் தீட்டப்பட்ட, ஸ்திர தன்மை கொண்ட துருப்பிடிக்காத இரும்பு கூரை வசதி, நடப்பாண்டில் 100 கிடங்குகளில் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பெருவளாக சேமிப்பு கிடங்குகளில் முன்னுரிமை அடிப்படையில், இன்றியமையாத தேவைகளான சாலை வசதி, நீர்வடிகால் மற்றும் தொழிலாளர் நலன் சார்ந்த சுமைதூக்குவோர் அறைகள், குடிநீர் வசதி மற்றும் மின் ஆக்கி (Genset) நிறுவுதல் போன்ற பணிகள், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை இம்மான்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கூட்டுறவு இயக்கங்களை வலுப்படுத்துவதிலும், முன்னேற்றம் அடையச் செய்வதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

6. நடப்பாண்டில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவியுடன் 117 இடங்களில் 26 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

7. கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகளை நவீனமயமாக்கும் முயற்சியில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவியுடன்

94 இடங்களில் 9 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

8. கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே வங்கிச் சேவையினை வழங்கும் பொருட்டு மத்தியக் கூட்டுறவு வங்கியின் 14 புதிய கிளைகள், 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்படும்.

9. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு, அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் தலா ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட உரக் கிடங்குகள், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவியுடன் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை இம்மான்றத்தில் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# நொய்யல் ஆற்றை மாசுபடாமல் சீரமைக்கும் திட்டம்!

## 09.07.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகும் சின்னாறு மற்றும் காஞ்சிமாநதி இணைந்து நொய்யல் ஆறாக உருப்பெற்று, மேற்கு கிழக்காக, கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களின் வழியாக சென்று, கரூர் மாவட்டத்தின் நொய்யல் என்ற கிராமத்தின் அருகில் காவிரியில் கலக்கின்றது.

திருப்பூர் மாநகராட்சி மற்றும் அருகாமையில் உள்ள பகுதிகளை நொய்யல் ஆறு கடக்கும் போது, வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரினால் மாசடைவதைத் தவிர்க்கும் பொருட்டு, ஒரு திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தில், திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் நொய்யல் ஆற்றின் இரு கரைகளிலும் தடுப்புச் சுவர் அமைத்து, வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரினை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல தடுப்புச் சுவரின் வெளிப்புறத்தில் கழிவுநீர் வடிகால் (Baby Canal) அமைத்தல், தேவையான இடங்களில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், நடைபாதை அமைத்தல், கரையோர பூங்கா மற்றும் அலங்கார விளக்குகள் அமைத்தல், அணைக்கட்டு பகுதியினை மேம்படுத்துதல் மற்றும் நதியினை தூர்வாரி சுத்தப்படுத்துதல் ஆகிய பணிகள் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து, வரும் காலத்தில் நொய்யல் ஆறு மாசடையாமல் இருப்பதற்கான பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ✵

# நெடுஞ்சாலைகளில் விபத்துக்கள் ஏற்படும் பகுதிகளை கண்டறிய 25 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் வாகன கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறைகள்!

09.07.2018

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெடுஞ்சாலைகளில் அதிகமாக சாலை விபத்துக்கள் ஏற்படும் பகுதிகளை கண்டறிந்து, அவ்விடங்களில் சோதனை அடிப்படையில், வாகனப் பதிவெண் பலகையினை படிக்கும் தானியங்கி புகைப்படக் கருவிகள் மற்றும் வாகன கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறைகள் 25 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

* * *

நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாக விளங்கும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, சாதகமான தொழில் கொள்கைகளை வகுத்து, தொழில் முனைவோர்களை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கும் பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு **அம்மா** அவர்களின் அரசு எடுத்து வருகிறது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K.பழனிசாமி** அவர்கள்

